Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி–02 | 17–07–2004 | சனிக்கிழமை | ஓசை –150

S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத
கணகவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
(சி-9944) 077-6059672

# புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன் மக்கள் விருப்பத்தை அறிந்துகொள்ளவேண்டும்

## வலியுறுத்துகிறது ஜே. வி. பி.

**தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஆரம்பிக்கப்படும் சமாதானப் பேச்சு வார்த்தை இறுதித்தீர்வை அடிப்படையாகக் கொண்டதா அன்றேல் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை அடிப்படையாகக் கொண்டதா என்பது தொடர்பாக இலங்கை மக்களின் விருப்பத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்ற கொள்கையே சுதந்திரக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்று மக்கள் விடுதலைமுன்னணி தெரிவிக்கின்றது.**

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் கட்சிகளுடனும் இந்த விடயங்கள் குறித்து வெவ்வேறாக கலந்துரையாடத் தீர்மானித்தமைக்கும் இந்த நிலைப்பாடே காரணம் என்று கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். இடைக் கால தன்னாட்சி அதிகாரசபையை அடிப்படையாகக் கொண்ட விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை களை ஆரம்பிப்பது பொதுவாக இலங்கைக்குள் வாழும் சகல இன மக்கள் மீதும் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது அரசாங்கத்தின் நிலைப்பாடு என்று மக்கள் விடுதலை முன்னணி கூறுகின்றது.இதனால் குறிப்பிட்ட கால எல்லைக்குள் இறுதித்தீர்வு எட்டுவது குறித்து பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் (12 ஆம் பக்கம்பார்க்க)

## இந்திய மீனவரின் அத்துமீறலுக்கு எதிராகப் போராட்டம் நடத்த முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு கடற்பரப்பில் இடம்பெறும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை தடுத்து நிறுத்து வது தொடர்பாக முக்கிய சந்திப்பு ஒன்று நேற்று வடமாகாண கடற்றொழி லாளர் சங்கச் சமாசத்தில் இடம்பெற் றுள்ளது.

யாழ்.மாவட்ட கடற்றொழிலா ளர் சங்க சமாசத் தலைவர் தவரட் ணம் தலைமையில் இடம்பெற்ற இச்சந்திப்பில் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கடற்றொழிலாளர் சங்கங் களின் பிரதி நிதிகளும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண் டனர்.

இதன்போது இந்திய மீன வர்களின் அத்துமீறல்களால் யாழ். குடாநாட்டு கடற் றொழிலாளர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், (12 ஆம் பக்கம்பார்க்க)

## சிறிலங்காவுக்கு அமெரிக்க இராணுவ உதவிகள் சமாதான முயற்சிகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்

### யாழ்.வந்த அமெ.அதிகாரிகளிடம் தமிழ்க் கூட்டமைப்பு தெரிவிப்பு

"இலங்கை அரசுடன் இருந்தவாறு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க மேற்கொள்ளப்பட்டு வருகின்ற முயற்சிகள், இலங்கை அரசிற்கு அமெரிக்க அரசினால் தற்பொழுது வழங்கப்படுகின்ற இராணுவ உதவிகளால் பலவீனப்பட்டுச் செல்வதாக்" தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை குடாநாட்டுக்கு விஜயம் செய்திருந்த இலங்கைக்கான அமெ ரிக்கத் தூதுவராலயத்தின் அரசியல் விவகா ரங்களுக்கான பிரிவினைச்சேர்ந்த செல்வி கொடி சி.ரெயிலருடன் நடாத்திய பேச்சுக் களின் போதே மேற்கண்டவாறான குற்றச் சாட்டை அவர்கள் எழுப்பினர்.

யாழ். நகரப்பகுதியில் உள்ள இலங்கை (12 ஆம் பக்கம்பார்க்க)

## சச்சிக்கு வந்த பாசலிலேயே சிறைக்குள் துப்பாக்கி வந்தது

### -துப்பாக்கிச் சூடு நடத்தியவர் வாக்கு மூலம்

(கொழும்பு)

சுட்டுக் கொல்லப்பட்ட சச்சிமாஸ்ரருக்கு ஒரு மாதத்திற்கு முன்பு வந்த பாசலிலேயே இந்தக் கைத்துப்பாக்கி வந்ததாக மட்டக் களப்பு சிறையில் துப்பாக்கிச் சூட்டை நடத் திய மகேந்திரன் புவிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்புச் சிறையில் நேற்று முன் தினம் நடந்த கைத்துப்பாக்கிச் சூட்டுச் சம்ப வத்தின் போது கொல்லப்பட்ட சச்சிமாஸ்ரர் என்பவருக்கு கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு வந்த பாசலில் இந்தக் கைத்துப்பாக்கி, கைக் குண்டு, மற்றும் கையடக்கத் தெலைபேசியும் இருந்ததாகத் தெரிவித்த புவிதரன்.

இந்தப் பாசல் வந்த விபரம் தனக்கும் சுட்டுக் கொல்லப்பட்ட இருவருக்கும் மாத்திரமே தெரியும் எனவும் அவர் கூறியதாக பொலிஸ் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன.

## மீன் முள்ளு தொண்டையில் சிக்கி 8 பிள்ளைகளின் தாயார் மரணம்

(யாழ்ப்பாணம்)

உணவை மென்று விழுங்கும் போது மீன் முள்ளு ஒன்று தொண்டையினுள் சிக்கிக் கொண்டதனால் குடும்பப் பெண்மணி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந் துள்ளார். கடந்த 9 ஆம் திகதி தொண்டையினுள் மீன் முள்ளுச் சிக்கிக் கொண்டதாக தெரிவித்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளவாலை யைச் சேர்ந்த மரியஸ்ரலா (வயது 42) என்ற 8 பிள்ளை களின் தாயாரே சிகிச்சை பயனளிக்காததினால் நேற்று வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

தொண்டையினுள் மீன் முள்ளுச்சிக்கியிருந்தும் உடன டியாக அதற்குரிய சிகிச்சைகளை வழங்காத தினால் ஏற்பு வலியாக்கியே இவர் உயிரிழந்திருப்பதாக வைத் திசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (33)

## அரசின் சமாதான செயலகச் செயலர் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம்

கிழக்கு மாகாணத்தின் பாது காப்பு நிலைமைகளைக் கண்டறியும் முகமாக அரசாங்க சமாதானச் செய லகத்தின் செயலாளர் நாயகம் ஜயந்த தனபால நேற்று மட்டக்களப்பிற்கு விஜயம் செய்துள்ளார்.இவர் இரா ணுவ, மற்றும் பொலிஸ் அதிகாரிகளை யும் அப்பிரதேசத்தைச் சேர்ந்த சமூக அமைப்புக்களின் அங்கத்தவர் களையும், மேலும் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின ரையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை யினை நடத்தியுள்ளார்.

அரசாங்க சமாதான செயலகத் தின் செயலாளர் நாயகம் ஜயந்த தனபால மட்டக்களப்பில் தாம் நடத் திய பேச்சுவார்த்தை பற்றி ஊடகவிய லாளருக்குக் கருத்துத் தெரிவிக்கை யில் மட்டக்களப்பு விஜயத்தின் போது தாம் சந்தித்த பிரதி நிதிகள் சமா தானம் நிலைபெற வேண்டுமென் பதில தமது ஆர்வத்தைத் தெரிவித்துள்ள தோடு, நாட்டில் மீண்டும் சமாதா னத்தை (12 ஆம் பக்கம்பார்க்க)

## இரு விபத்துக்களில் மன்னாரில் 11 பேர் காயம்

மன்னாரில் நேற்று நடைபெற்ற இரு விபத்துக் களில் 11 பேர் காயமடைந்தனர். நேற்றுக்காலை திருகோண மலையிலிருந்து மன்னார் நோக்கி வந்த இலங்கை போக்கு வரத்துச் சபை பஸ்வண்டியில் பயணம் செய்த பெரிய தம்பனையைச் சேர்ந்த ச. ஏகநாதன் வயது(32) பஸ் வந்து கொண்டிருக்கையில் நித்திரைத் தூக்கத்தில் எழுந்து பஸ்சிலிருந்து இறங்கியதில் பலத்த காயத்திற்குட்பட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இதேவேளை நேற்றுக்காலை 7.00 மணியளவில் மன்னார் தொட்டியடியிலிருந்து மாதா ஆலய திருவிழா விற்குச் சென்று திரும்பிய சமயம் உயிலங்குளம் எனுனும சந்தியில் சிறிய வேன் ஒன்று புரண்டதன் காரணமாக 10 பேர் பலத்த காயத்திற்குள் (12 ஆம் பக்கம்பார்க்க)

## யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் முதலாவது கூட்டம் நேற்று நடைபெற்றது

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இவ்வாண்டிற்கான முதலா வது கூட்டம்,தெரிவு செய்யப்பட்ட தலைவரான மாவை சேனாதிராசா தலைமையில் நேற்று இடம்பெற்ற தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் சக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர்களால் இணைப்புக் குழுவிற் கான தலைவராக மாவை சேனாதி ராசா அங்கு தெரிவு செய்யப்பட்டி ருந்தார்.

புதிய அரசு பதவியேற்று மூன்று மாதகாலப்பகுதியை கடந்துள்ள போதிலும் மாவட்ட ஒருங்கிணைப் புக்குழுக்கூட்டத்திற்கு தலைமை தாங்கும் பாராளுமன்ற உறுப்பினர் தொடர்பாக எந்தவொரு அறிவிப் புனையும் விடுத்திருக்கவில்லை.

எனினும் புதிய அரசில் அமைச் சராக அங்கம் வகிக்கும் டக்ளஸ் தேவானந்தாவோ பெரும் பாலும் தலைமைதாங்குபவராக அரசால் நியமிக்கப்படலாமென எதிர்பார்க கப்படுகிறது ஆயினும் படை முகாம்களிலோ அல்லது அவர் சார்ந்த அமைப்பான ஈ.பி.டி.பி யினது ஆலுவலகங்களிலோ கூட்டப்படும் ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்களில் தாங்கள் கலந்து கொள்ளப்போவதில்லையென கூட்டமைப்பின் பாராளுமன்ற (12 ஆம் பக்கம்பார்க்க)

## கும்பகோணம் பாடசாலையில் தீவிபத்து 80 பாலகர்கள் உடல் கருகிப் பலி; பலர் காயம்

கும்பகோணத்தில் உள்ள தனியார் பாடசாலை யொன்றில் நேற்று ஏற்பட்ட தீவிபத்தில் சுமார் 80க்கும் மேற்பட்ட பச்சிளம் பாலகர்கள் உடல் கருகிப் பலியாகியுள்ளனர். இவர்கள் தவிர சுமார் 100க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் பலத்த எரிகாயங் களுடன் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட டுள்ளனர்.



இவ்விபத்துப் பற்றி மேலும் தெரியவருவ தாவது: கும்பகோணத்தில் அமைந்துள்ள மூன்று மாடிகளைக் கொண்ட தனியார் பாடசாலையொன்றில் சுமார் 900 மாணவ, மாணவியர் கல்வி கற்று வருகின் றனர். பகவான் கிருஸ்ணா பெண்கள் நடுநிலை மற்றும் உயர் நிலைப்பள்ளி என்ற பாடசாலையும், சரஸ்வதி ஆரம்பப் பாடசாலையுமே இக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. முதல் இரண்டு தளங்களிலும் (12 ஆம் பக்கம்பார்க்க)

## வரிவிளம்பரம்

### உடன் பெற்றுக்கொள்ள

ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கான வினாத்தாள் மற்றும் புத்தகம் அனைத்தும் பெற்றுக் கொள்ள கூடிய இடம் குரு புத்தகசாலை கனகபுரம்தெரு, கிளிநொச்சி. (4826)

### போட்டிப் பரீட்சை வகுப்பு

ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள் வார நாட்களில் மாலை 5-6 மணி வரையும் வார. இறுதி நாட்களில் காலை 9-12 மணி வரையும் வவுனியா புகையிரத நிலையத் திற்கு முன்பாக இயங்கும் கேம்பிறிஜ் கல்லூரியில் நடைபெறும்.(4635)

### தரவட்டக்கருத்தரங்கு
(தென்மராட்சி)

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் கடமையாற்றி வரும் வர்த்தக பாட ஆசிரியர்களுக்கான தர வட்டக்கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 21 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இதில் சம்பந்தப்பட்டவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (33)

## நேர்முகத் தேர்வு

பாண்டியன் வாணிபத்தால் யூலை 07ஆம், 8ஆம், 9ஆம், திகதிகளில் ஈழநாதத்தில் வெளியான களஞ்சியக்காப்பாளர், பதிவாளர், விற்பனையாளர்களுக்கான நேர்முகத்தேர்வு 21.07.2004 காலை 10.00 மணிக்கு பாண்டியன் நடுவப் பணிமனையில் நடைபெறும்.

விண்ணப்பங்களை அனுப்பத்தவறியவர்களும் நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ளலாம்.

நேர்முகத் தேர்வு இடம்

நடுவப்பணிமனை,
பாண்டியன்வாணிபம்,
றெட்பானா சந்தி,
விசுவமடு.

(4825)

## பரதநாட்டிய அரங்கேற்றம்

அன்புடையீர்!
எங்கள் செல்வப்புதல்வியும்,
திருமறைக் கலாமன்ற மாணவியும்,
நுண்கலைமாணி,
நாட்டியக் கலாவித்தகர்
ஸ்ரீமதி ஆனந்த ஜோதி தர்ஷனன்
அவர்களின் மாணவியுமாகிய



### செல்வி சுதர்சினி லூர்த்து நாதன்

அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம்

18.07.2004 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் கலை ஆர்வலர்கள் அனைவரும் குடும்ப சமேதரராய் வருகை தந்து அரங்கேற்றம் காணும் செல்வியை ஆசீர்வதித்து, வாழ்த்தி விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

28. இரண்டாம் குறுக்குத்தெரு,
குருநகர், யாழ்ப்பாணம்.

தங்கள் நல்வரவை நாடும்
திரு.திருமதி லூர்த்துநாதன்

(சி.10116)

## நன்றி நவிலல்

கடந்த 11.07.2004 அன்று அகால மரணமடைந்த திரு.தே.உதயகுமார் அவர்களின் மரணச் செய்தி கேட்டு எமது துயரத்தில் பங்கெடுத்து ஆறுதல் கூறியவர்களுக்கும், அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்ட

* கிளி/தொழில்நுட்பக்கல்லூரி,
* கிளி/இந்துக்கல்லூரி பழைய மாணவர்கள்,
* யாழ்/அன்னசத்திர லேன் நண்பர்கள்,
* பேரிகை-அமைப்பு, கிளிநொச்சி,
* திருநகர், சனசமூக நிலையம், விளையாட்டுக்கழகம், கிராமஅபிவிருத்திச் சங்கம்.
* யாழ். பல்கலைக்கழக அனைத்து பீட மாணவர்கள்,
* தமிழீழ மாணவர் அமைப்பு,

ஆகியோருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இல.1169, திருநகர்,
கிளிநொச்சி. (4643)

தகவல்:-
குடும்பத்தினர்.

## உயிரோடை

பதிப்பகம், ஓவியக் கலையகம்.
Uyirodai Printers & Arts.
யாழ்சாலை கிளிநொச்சி.

### துணிவகை பிறின்டிங்

பெனர் (சிறிய, பெரிய அளவில்)
ரீசேட்
ரைகள் (பாடசாலை உட்பட)
கொடிகள்
பாடசாலைகள், விளையாட்டுக்கழகங்கள்)
சிறிய, பெரிய கைப்பைகள்
வெல்பெற் இம்போசிங்

### அழைப்பிதழ்கள்

- திருமண அழைப்பிதழ்கள்
- சாதாரண வகை
- இந்திய வடிவமைப்பிலானவை
- பூப்புனித நீராட்டு விழா
- பிறந்தநாள் விழா
- தொட்டிலாட்டு விழா

### ஸ்ரிக்கர்கள்

சாதாரண ஸ்ரிக்கர்
B.V.C ஸ்ரிக்கர்
கண்ணாடி ஸ்ாக்கர்
டோமிங் ஸ்ரிக்கர்

### காகிதாதிகள் பிறின்டிங்

பில் புத்தகங்கள்
லேமிள்
நினைவு மலர்கள்
பிரசுரங்கள்
கடிதத்தலைப்புக்கள்
சிறிய, பெரியளவிலான சுவரொட்டிகள்

### ஏனையவற்றில் பிறின்டிங்

அரிசிச்சாக்கு
பசளைப்பை
சிப்போட்
தகரம்

### றபர்ஸ்ராம்

பொலிமர் வகை
2 மணி நேரத்தில்
உலகத் தரம் வாய்ந்த
பிறீ இங் இறப்பர் ஸ்ராம்
சாதாரண இறப்பர் ஸ்ராம்

### வன்னி ஓவியக்கலையக ஓவியரின் ஒருங்கிணைப்புடன் குலம் ஆட்ஸ்

உயிரோட்டமான நிழற்படங்கள் விளம்பர பெயர்ப்பலகைகள்
சாதாரண நிழற்படங்கள், பாடசாலை,
விளையாட்டுக் கழகங்களின்
இலட்சினைகள் வடிமைத்து தயாரித்தல்

போன்றவற்றை கணினி வழவமைப்பில், ஸ்கிறீன்பிறின்ழங், ஒப்செற் பிறின்ழங் ஆகியவற்றில் சிறப்பாக ஒரே இடத்தில் அச்சிட்டு பெற்றுக் கொள்ளலாம்.

(சி-10027)

# ஈராக்கின் ஆட்சி மாற்றத்தில் ஐ.நா தீவிரமான பங்கு வகிக்க வேண்டும்

## -இடைக்கால அரசின் பிரதமர் கோரிக்கை

(பாக்தாத்)


**ஈராக்கின் ஆட்சி மாற்றத்தில் ஐ.நா. சபை தீவிரமான பங்கு வகிக்க வேண்டும் என்று ஈராக்கின் இடைக்கால அரசின் பிரதமர் இயாத் அலாபி கேட்டுக்கொண்டுள்ளார்.**

ஐ.நா சபை வாக்களித்தபடி தேர்தல் நடத்த உதவவேண்டும், கூடிய விரைவில் தனது பணியாளர்களை ஈராக்கிற்கு அனுப்ப வேண்டும். இவ்வாறு இயாத் அலாபி பாக்தாத்தில் பேசுகையில் கூறியுள்ளார்.

கிளர்ச்சியாளர்களை ஒடுக்கவும் நடவடிக்கைகள் பற்றி அறிவித்த அவர் மேலும் துருப்புக்களை அனுப்புமாறு உலக சமுதாயத்தைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை ஈராக்கில் தீவிரவாதிகள் கச்சாய் எண்ணெய் குழாய் ஒன்றை வெடி வைத்துத் தகர்த்துள்ளனர். இதனால் துருக்கிக்கு கச்சாய் எண்ணெய் ஏற்றுமதி செய்வது தடைப்பட்டுள்ளது.

வடக்கு ஈராக்கில் நேற்று முன்தினம் தனியார் ஏற்றுமதி செய்யும் கச்சாய் எண்ணெய் குழாயே தீவிரவாதிகளால் வெடிக்க வைக்கப்பட்டுள்ளது ஈராக்கின் மிகவும் முக்கிய எண்ணெய்த் துறைக்கு ஏற்பட்ட பலத்த பாதிப்பு இதுவாகும் என்று கூறப்பட்டுள்ளது.



ஜிப்ரோல்டர் நீரிணையில் அமைந்துள்ள அமெரிக்காவின் 153 வருட பழமை வாய்ந்த கோட்டை இது. 23 ஏக்கர் பரப்பளவு கொண்டது.



1950–53 காலப்பகுதியில் இரு கொரியாக்களுக் கிடையிலான யுத்தத்தால் பிரிந்து தற்போது வட கொரியாவிலிருக்கும் உறவினர்களைப் பார்த்து விட்டு திரும்பும் தென்கொரிய உறவினர்கள்.

# சர்வதேச நீதிமன்ற உத்தரவையும் மீறி தடுப்புச்சுவரைக் கட்டுகிறது இஸ்ரேல்

(ஜெருசலேம்)

பாலஸ்தீனத்தின் மேற்குக் கரையில் சர்வதேச நீதிமன்றத்தின் தடையையும் மீறி இஸ்ரேல் தொடர்ந்து தடுப்புச்சுவரை அமைத்துவருகின்றது.

மேற்குக்கரையில் அல்கலீல் எனுமிடத்தில் தடுப்புச்சுவரை அமைப்பதில் ஈடுபட்டிருந்த இஸ்ரேலியத் துருப்பினர், பலஸ்தீனர் ஒருவரை நேற்று முன்தினம் சுட்டுக் கொன்றுள்ளனர். இந்த நபர் ஹமாஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று இஸ்ரேல் கூறியுள்ளது.

இதேபோல மேற்குக்கரைப் பகுதியைப் பிரிக்கும் தடுப்புச்சுவர் பற்றிய சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பை ஐ.நா.சபை பரிசீலிக்க சிறப்புக்கூட்டத்தொடரை ஐ.நா. சபை நேற்று கூட்டியுள்ளது.

ஐ.நா.சபையின் உறுப்பு நாடுகளில் பெரும்பாலானவை குறிப்பாக அரபிய நாடுகள் மற்றும் கூட்டுச்சேரா இயக்க நாடுகளின் வேண்டுகோளினையடுத்தே நேற்று இந்த சிறப்புக்கூட்டத் தொடர் கூட்டப்பட்டுள்ளது.

இம்மாதம் ஒன்பதாம் திகதி சர்வதேச நீதிமன்றம், தடுப்புச்சுவர் அமைந்துள்ளமை இஸ்ரேலின் சட்டத்திற்குப் புறம்பான செயல் என்றும், உடனடியாக தடுப்புச்சுவரமைப்பதை நிறுத்த வேண்டுமென்றும் உத்தரவு பிறப்பித்திருந்தது.

இஸ்ரேலின் இந்த செயல் சர்வதேச சட்டத்தை மீறும் செயல் என்று ஐ.நா.சபையை ஆதரிக்குமாறு அரபிய நாடுகளின் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# நைகர் பிரதமர் சென்ற கெலிக்கொப்டர் விபத்தில்

## –அதில் சென்றவர் எவருக்கும் பாதிப்பில்லை

(நைஜாமி)

நைகர் நாட்டின் பிரதமர் ஹாமா அமாடௌவ் பயணம் செய்த உலங்குவானூர்தி விபத்திற்குள்ளானது.எனினும் பிரதமரும் கூடச் சென்றோரும். காயம் எதுவுமின்றி தப்பிக் கொண்டனர்.

இம்மாதம் 24ஆம் திகதி நடைபெறவுள்ள மாநகர சபைத் தேர்தல் நடவடிக்கைகளுக்காக சென்று கொண்டிருந்த போதே கடந்த புதன் "மகாறியா" என்ற இடத்தில் இவ்விபத்து நேரிட்டது.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பிரதமரும் ஏனையோரும் பயணம் செய்த உலங்குவானூர்தி மரமொன்றுடன் மோதியதாகவும் எனினும் அதில் இருந்தவர்களுக்கு காயமேதும் ஏற்படவில்லையென்றும் கூறப்படுகின்றது.

பிரதமர் அமாடௌவ் திட்டமிட்ட படி தனது தேர்தல் கூட்டத்தை விபத்தின் பின் நடாத்தினார் என ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

# இரகசியத் தகவல்கள் காணாமல் போயுள்ளதால் அமெ. அணுவாயுத ஆராய்ச்சிக் கூடத்தில் பணி இடைநிறுத்தம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் மிகப் பெரிய அணுவாயுத ஆராய்ச்சிக் கூடம் அதன் பணிகளை இடை நிறுத்தியுள்ளது.

இரகசியத் தகவல்கள் காணாமற் போனதைத் தொடர்ந்து பாதுகாப்பு முன் எச்சரிக்கையாக இவ்இடைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேல் மெக்சிக்கோவிலுள்ள இவ் ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து எத்தகவல்கள் காணாமற் போனதென வெளியிடப்படவில்லை. ஆயினும் முக்கிய தகவல்கள் காணாமற்போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் அணுவாயுத சோதனைத் திட்டம் தனது நடவடிக்கைகளை இடைநிறுத்தியுள்ளன. இதுவே முதல் முறை என்பது கூறப்பட்டுள்ளது. அத்துடன் முதலாவது அணுக்குண்டின் பிறப்பிடம் இவ் அணுவாயுத சோதனை நிலையம் என்பது குறிப்பிடத்தக்கது.

## -சர்வதேச குற்றவியல் நீதி விசாரணையிலிருந்து-

# அமெ.படை விலக்களிக்கப்படுவதை விரும்பாத நாடுகளுக்கான நிதி உதவியை நிறுத்த முடிவு


## அமெரிக்கப் பிரதிநிதிகள் சபை தீர்மானம்

(வோஷிங்டன்)

அமெரிக்கப் படைகளுக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்ற த்தின் விசாரணைகளிலிருந்து விலக்களிப்பதை உத்தரவாதப்படுத்தும் நடைமுறைக்கு இணங்கத்தவறிய நாடுகளுக்கான நிதி உதவியை அமெரிக்கா நிறுத்தவுள்ளது.

இதற்கான தீர்மானம் பிரதிநிதிகள் சபையில் மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் கென்யா, தென்னாபிரிக்கா, மெக்சிக்கோ, போன்ற சுதந்திர முக்கியத்துவம் வாய்ந்த நாடுகளுக்கான உதவிகளும், இரத்துச் செய்யப்படுமென தீர்மானத்தை ஆட்சேபித்தோர் கூறியுள்ளனர்.





ஈராக்கிலிருந்து பிலிப்பைன்ஸ் துருப்புகள் வெளியேறப் போவதாக அறிவித்துள்ள நிலையில் ஈராக்கியத் தீவிர வாதிகளால் கைது செய்யப்பட்ட பிலிப்பைன்ஸ் வாசியையும் அவரை வீடுதலை செய்வதாகத் தொலைக் காட்சியில் அறிவிக்கப் பட்டதையடுத்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்யும் உறவினர்களையும் நண்பர்களையும் காணலாம்.

# எயிட்ஸ் நோயை எதிர்த்துப் போரிட ஐரோப்பிய ஆணைக்குழு நிதிஉதவி

எயிட்ஸ் நோயை எதிர்த்துப் போராடுவதற்கு உலக நிதியத்திற்கு ஐரோப்பிய ஆணைக்குழு மேலும் ஐந்துகோடி 19 இலட்சம் டொலர்களை வழங்க நேற்று உறுதி வழங்கியுள்ளது.

ஏனைய அங்கத்துவ நாடுகளும் இதற்கான நிதிப்பங்களிப்பை அதிகரிக்க வேண்டும் என்றும் ஐரோப்பிய ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை இந்த நிதியத்திற்கு நிதிப்பங்களிப்புச் செய்ய அமெரிக்கா மறுத்து வருகிறது என ஐரோப்பிய ஆணைக்குழுவின் மனித சமூக அபிவிருத்திப்பிரிவின் தலைமை டாக்டர் லீவ் தெரிவித்துள்ளார்.

15ஆவது சர்வதேச எயிட்ஸ் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அமெரிக்கா பங்களிப்புச் செய்ய மறுத்ததால் மாநாட்டில் கசப்புணர்வு ஏற்பட்டது. அக்கசப்புணர்வு ஐரோப்பிய ஆணைக்குழுவின் உதவியால் மறுக்கப்பட்டுவிட்டது.

சலரோகம், மலேரியா போன்ற நோய்களுக்கெதிரான செயற்பாடுகளுக்கும் இந்நிதி பயன்படுத்தப்படும் என லீவ் மேலும் கூறியுள்ளார்.

## சூறாவளி

(பாங்கொக்)

கொங் கொங்கில் கடுமையான சூறாவளி வீசியதால் நகரம் நேற்று ஸ்தம்பிதமடைந்தது. கடும் மழையுடன் வீசிய சூறாவளியின் வேகம் மணித்தியாலத்திற்கு 60 கி.மீற்றராக இருந்தது. கொங் கொங்கின் வளிமண்டல நிறுவனம் இந்தச் சூறாவளி குறித்து நேற்றுக்காலை எச்சரிக்கை விடுத்திருந்தது. இதனை யடுத்துப் பாடசாலைகள், அலுவலகங்கள் முன் ஏற்பாடாக மூடப்பட்டன.

# தென் கொரியக் கப்பல் மோதி சீனக் கப்பல் மூழ்கியது

(சியோல்)

தென்கொரியாவின் துறைமுக நகரான பூதானுக்கப்பால் தென்கொரிய எண்ணைத் தாங்கிக் கப்பல் சீனச் சரக்குக் கப்பலுடன் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ் விபத்தில் மோசமாகச் சேதமடைந்த சீனக் கப்பல் கடலில் மூழ்கியுள்ளது.தென் கொரியக் கடலோர காவல் படையினர் சீனக்கப்பலிலிருந்தவர்கள் அனைவரையும் காப்பாற்றியுள்ளனர்.எண்ணைத்தாங்கிக் கப்பலுக்கு சிறிதான சேதம் ஏற்பட்டுள்ளது.

# கிளி.மாவட்ட வைத்தியசாலையில் ஜப்பானிய நிதியுதவியுடன் அதிதீவிர சிகிச்சைப்பிரிவு

## -20ஆம் திகதி திறந்து வைக்க ஏற்பாடு

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஜப்பானிய அரசின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள அதிதீவிர சிகிச்சைப்பிரிவு எதிர்வரும் 20ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.**

காலை 10.45 மணியளவில் நடைபெறவுள்ள இந்தத் திறப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்



தினராக டாக்டர் யுஜிமியாகார (முதன்மைச் செயலாளர், பொருளாதாரப்பிரிவு ஜப்பானிய தூதராலயம்) கலந்து கொள்ளவுள்ளார். இவர் பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து வைப்பதுடன் அதிதீவிர சிகிச்சைப்பிரிவையும் திறந்து வைக்கவுள்ளார்.

டாக்டர் எஸ்.குமாரவேல்பிள்ளை (மாகாண சுகாதாரப்பணிப்பாளர் சேவைகள், திருகோணமலை), டாக்டர் ஆர்.எம்.எஸ் ரட்ணாயக்க (செயலாளர், மாகாணசுகாதார அமைச்சு, வடகிழக்கு மாகாணசபை), டாக்டர் வி.ஜெகநாதன் (இணைப்பாளர், நிபுணத்துவ ஆலோசகர், வடகிழக்கு சுகாதார அபிவிருத்தித்திட்டம்), டாக்டர் யஸ்மீன்கக் (இலங்கைக்கான பதில்பிரதிநிதி, யுனிசெப் கொழும்பு), ரி.இராசநாயகம் (அரசாங்க அதிபர், கிளிநொச்சி), என்.அருண் (பணிப்பாளர், தமிழீழ சுகாதார சேவைகள்), டாக்டர் வை.டி நிகால் ஜெயதிலக (மேலதிக செயலாளர், சுகாதார பாதுகாப்பு அமைச்சு, போசாக்கு, ஊவாவெலச அபிவிருத்தி; தலைவர், வழிகாட்டற்குழு, இணைப்பாளர், ஜப்பானிய நிதித்திட்டம், வடகிழக்கு மாகாணத்தின் தாய் சேய் சுகாதாரத்தை மேம்படுத்துதல்) ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனரென கிளிநொச்சி பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

## குளிரூட்டி வழங்கல்

ஒட்டுசுட்டான் கால்நடை வைத்திய பணிமனைக்கு மிகவிரைவில் குளிரூட்டி வழங்கப்படவுள்ளது. நீண்டநாட்களாக இருந்த குறைபாடு நீக்கப்படவுள்ளது. என கால்நடை வைத்தியர் சு.கஜரஞ்சன் தெரிவித்தார். (05)

# பதினாறு குடும்பங்கள் மீள் குடியமர வருகை

(ஒட்டுசுட்டான்)

வுனியா பூந்தோட்டம் நலன்புரி முகாமிலிருந்து 16 குடும்பங்கள் மீளக்குடியமர்வுக்காக கடந்த புதன்கிழமை முல்லை. மாவட்டத்திற்கு வந்துள்ளனர். இக்குடும்பங்களுக்கு 'பாஜ்' நிறுவனம் உணவு அல்லாத பொருட்களையும் வழங்கியது.

இதில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் 14 குடும்பங்களை சேர்ந்த 66 அங்கத்தவர்களும் கரைதுறைப்பற்று பிரதேசத்திற்கு ஒரு குடும்பமும், புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு ஒரு குடும்பமும் வருகைதந்து சின்னத்தம்பி இ.த.க. பாடசாலையில் வைத்து உணவு அல்லாத பொருட்கள் வழங்கப்பட்டு பின்னர் ஒட்டுசுட்டான் கிராம அலுவலர் தமிழ்ச்செல்வன் தலைமையில் அந்தந்த கிராமங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். (05)

## போட்டிகள் இடமாற்றம்

(அலுவலக செய்தியாளர்)

2004.07.18 ஆம் நாள், ஞாயிற்றுக் கிழமை கிளிநொச்சி மகா வித்தியாலத்தில் நடைபெற விருந்த கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் கலைத்திறன் போட்டிகள் கிளிநொச்சி மத்தியகல்லூரி மண்டபங்களில் நடைபெறவுள்ளது. எனவே மாணவர்களையும், நடுவர்களையும் கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு குறித்த நேரத்திற்கு வருகை தருமாறு தமிழ்ச்சங்கச் செயலாளர் வே.பரம நாதபிள்ளை கோரியுள்ளார். (சோ,கு)

# திருமலையில். கொரிய வைத்தியர் அக்குபஞ்சர் முறையில் சிகிச்சை

(திருமலை)

கொரியாவின்'கொன்ஸ்ரா' நிறுவனத்தின் பதினைந்து பேர் கொண்ட மருத்துவர் குழுவொன்று திருகோணமலை ஆயுர்வேத வைத்தியசாலைக்கு விஜயம் செய்தது.

அந்தக் குழுவினர் இலவசமாக அங்கு சிகிச்சை அளித்தனர். சுமார் 40,000 டொலர் பெறுமதியான ஆயுர்வேத மருத்துவப் பொருட்கள் இலவசமாக இப்பிரதேச மக்களுக்கு கடந்தவாரம் முதல் ஐந்து நாட்களுக்குத் தொடர்ச்சியாக வழங்கப்பட்டன. பல்வேறு நோய்களுக்கு ஆயுர்வேத மருத்துவ முறையிலான சிகிச்சைகளை அவர்கள் வழங்கினர். பல நோயாளர்களுக்கு 'அக்குபஞ்சர்' முறையிலான சிகிச்சையும் வழங்கப்பட்டது. திருகோணமலை மாவட்டத்திலிருந்து கந்தளாய்,மூதூர், நிலாவெளி, குச்சவெளி, கிண்ணியா , வெள்ளைமணல் பிரதேசங்களில் இருந்து பெரும்பாலான நோயாளர்கள் இலவச வைத்திய சிகிச்சையைப் பெற்றனர்.

# விபத்துக்களைத் தடுக்க காவல்துறையின் விசேட நடவடிக்கை தீவிரம்

(அலுவலக செய்தியாளர்)

வீதிவிபத்துக்களைத் தடுக்கும் முகமாக தமிழீழ காவல்துறையினர் விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மைக்காலமாக அதிகரித்து வரும் வீதி விபத்துக்களையும் அதனால் ஏற்படும் உயிரிழப்புக்களையும் தடுக்கும் நோக்குடன் தமிழீழ காவல்துறையின் வீதிபோக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் விசேட நடவடிக்கை களை மேற்கொண்டு வருகின்றனர்.



வீதியால் வாகனங்களை செலுத்தும் சாரதிகளுக்கு வீதிப்போக்குவரத்து நடைமுறைகளைத் தெளிவுபடுத்தி வரும் இதேவேளை போக்குவரத்து விதி முறைகளை மீறி வாகனங்களை செலுத்துவோர் மீது நடவடிக்கை எடுத்து வருவதோடு பொதுமக்கள் போக்குவரத்தின் போது மிக அவதானமாகப் பயணிக்க வேண்டுமெனவும், குறிப்பிடப்பட்ட வேகங்களுக்கு அதிகமாக வாகனங்களை செலுத்த வேண்டாமெனவும், வாகனங்களில் வர்ண ஒளி பரப்பும் மின் விளக்குகளை பொருத்துவதை முற்றாகத் தடை செய்யுமாறும் தமிழீழ காவல் துறையினர் கேட்டுள்ளனர். (ச)

# கணக்காய்வு நடைமுறைகளில் குறைபாடுகள் நிலவுகின்றன

## – உலக வங்கி அறிவுறுத்து

(கொழும்பு)

சிறிலங்காவின் கணக்காய்வு நடைமுறைகளில் குறைபாடுகள் உள்ளதாக உலகவங்கி சுட்டிக் காட்டியுள்ளதென பிரதி கணக்காய்வாளர் நாயகம் எட்மன் தெரிவித்துள்ளார்.

கணக்காய்வு அறிக்கைகளில் தரம் குறைந்திருப்பதும் அறிக்கைகளை சமர்ப்பிக்க தாமதம் போன்றவற்றுடன் கணக்காய்வு துறையின் கண்டுபிடிப்புகள், மக்களிடம் பயனற்றவையாக அமைந்திருப்பதும்,. சமர்ப்பிக்கப்படுகின்ற விடயங்கள் கருப்பொருளுக்கு பொருத்த மற்றவையாக காணப்படு வது என்பன அவற்றுள் சிலவாகும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினர் கடந்த மாதம் 14,931 பேருக்கு சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் கடந்த யூன்மாதம் 14,931 பேருக்குச் சிகிச்சை வழங்கப்பட்டது.இதில் திலீபன் மருத்துவ சேவை நிலையங்களான ஆழியவளைவில் 1942 பேரும், அளம்பிலில் 1819 பேரும், புங்குடுதீவில் 1731 பேரும், மாங்குளத்தில் 1703 பேரும், கற்சிலை மடுவில் 1509 பேரும், புளியங்குளத்தில் 1549 பேரும், பூநகரியில் 1426 பேரும், ஐயன்கண் குளத்தில் 1379 பேரும், அடம்பனில் 1082 பேரும், நைனாமடுவில் 791 பேருமாக மொத்தம் 14,931 பேர் கடந்த யூன் மாதம் சிகிச்சை பெற்றுள்ளார்கள். இவற்றுள் சுவாசப் பாதைத் தொற்றினால் 2640 பேரும், வைரஸ் காய்ச்சலினால் 3107 பேரும், விபத்துக் காயங்களினால் 1204 பேரும், தோல் நோயினால் 808 பேரும், குருதிச்சோகையினால் 430 பேரும், தொய்வினால் 396 பேரும், மண்டைப்பீனிசத்தினால் 410 பேரும், குடற்புண்ணினால் 266 பேரும், உயர்குருதி அமுக்கத்தினால் 264 பேரும், வயிற்றோட்டத்தினால் 245 பேரும், பல் நோயினால் 234 பேரும், ஒவ்வாமையினால் 214 பேரும், காதுத் தொற்றினால் 162 பேரும், சிறுநீர்வழித் தொற்றினால் 116 பேரும், நாய் கடியினால் 146 பேரும், மலேரியாக்காய்ச்சலினால் 78 பேரும், கண்நோயினால் 73 பேரும், வலிப்பினால் 43 பேரும், இருதய நோயினால் 18 பேரும், பாம்புக் கடியினால் 17 பேரும் உட்பட மொத்தமாக 14,931 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். அத்தோடு வாரத்தில் சில நாட்கள் நடமாடும் மருத்துவசேவை மேற்கொள்ளப் பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டும் உள்ளது. (தீ)

# குறிஞ்சாத்தீவு உப்பளத்திற்கு யு.என்.டி.பி. பிரதிநிதிகள் விஜயம்

## -மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்து ஆராய்வு

(ஒட்டுசுட்டான்)

ஆனையிறவு குறிஞ்சாத் தீவு உப்பளத்தினை யு.என். டி.பி. பிரதிநிதிகள் சென்று பார்வையிட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை யு.என்.டி.பி வன்னிக்கான திட்ட இணைப்பாளர் கிளாரி மைக் கோனாகீ, கிளிநொச்சி மாவட்ட திட்ட இணைப்பாளர் அருள் நாயகம், பொறியியலாளர், சமூக மேம்பாட்டு உத்தியோகத்தர் ஆகியோருடன் உப்பு நிறுவனத்தைச் சேர்ந்த பொது முகாமையாளர், உற்பத்தி முகா மையாளர் மற்றும் பொருண்மிய மதியுரை (ரெக்) யகத்தை சேர்ந்த டாக்டர் மனோகரன்ஆகியோர் சென்று பார்வையிட்டனர். இதில் உப்பின் தரத்தினை உயர்த்தல், பணியாளர்களுக்கான குடிநீர், சுகாதாரம், உணவு ஆகியவற்றைக் கவனித்தல் பற்றியும் ஆராயப்பட்டது. (05)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கு "யு.என்.எச்.சி.ஆர்" "பாஜ்" நிறுவனம் நிவாரணம்

(உடையார்கட்டு)

யுத்தத்தினால் பாதிப்புற்றோருக்கான உணவல்லாத பொருட்கள் விநியோகத்தின் முதலாம் கட்டப் பொருட்கள் நேற்றுமுன்தினம் சமூகபொருளாதார வளர்ச்சி நிறுவனத்தில் வைத்து வழங்கப்பட்டது.

''யு.என்.எச்.சி.ஆர்''உம், "பாஜ்"நிறுவனமும் இணைந்து தலா 6500ரூபா பெறுமதியான உணவல்லாத பொருட்களான சாறி,சறம், நுளம்புவலை, தரைவிரிப்பு, கத்தி, வாளி, குடம், பிளாஸ்ரிக் வேசின் என்பன அடங்கலான பொருட்களை விநியோகித்துள்ளன.

தொடர்ந்து இவ் உணவல்லாத பொருட்கள் உடையார்கட்டு, வள்ளிபுனம், தேராவில், வள்ளுவர்புரம். விசுவமடு மேற்கு, சுதந்திரபுரம், மாணிக்கபுரம் போன்ற சமூக பொருளாதார வளர்ச்சி நிறுவன ஆளுகைப்பகுதிகளில் குறுகிய கால இடைவெளியில் வழங்கப்படுமென பாஜ் நிறுவன பிரதிநிதி தெரிவித்துள்ளார். (19)

# கால்நடை வைத்தியர் பிரிவில் சிறந்த பண்ணையாளர் கௌரவிப்பு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் கால்நடை வைத்தியர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள கால்நடை வளர்ப்போரில் சிறந்த பண்ணையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வு கடந்த புதன் கிழமை காலை 10.30 மணியளவில் ஒட்டுசுட்டான் கால்நடை வைத்தியப் பணிமனையில் கால்நடை போதனாசிரியர் ரட்ணசபாபதி தலைமையில் நடைபெற்றது.

இதில் ஆடு, மாடு, கோழி ஆகியவற்றினை சிறந்த முறையில் வளர்த்த பண்ணையாளர்களுக்கு காசோலையினையும் சான்றிதழினையும் ஒட்டுசுட்டான் கால்நடை வைத்தியர் சு.கஜரஞ்சன் வழங்கிக் கௌரவித்தார்.

கருத்துரையினை வழங்கிய கால்நடை வைத்தியர் சு.கஜரஞ்சன் நீண்ட காலமாக குளிரூட்டி வசதிகள், மருந்துகள் இல்லாமையினால் பண்ணையார்களின் குறைகளை நிவர்த்தி செய்ய முடியாமல் இருந்தது எனவும் பண்ணையாளர்களின் குறையினை இயன்ற அளவு தீர்த்து வைப்பதாகவும் கூறினார். (05)

# தென்மராட்சி மீனவர் கடற்படையினரின் கெடுபிடிகுறித்து ம.உ.ஆணைக்குழுவிடம் முறைப்பாடு

(தென்மராட்சி)

**சிறிலங்கா கடற்படையினரால் தம்மீது மேற்கொள்ளப்பட்டுவரும் கெடுபிடிகளும், மனித உரிமைமீறல்களும் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும் எனக்கோரி தென்மராட்சி தெற்குக் கடற்றொழிலாளர்களால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.**

1995ஆம் ஆண்டிலிருந்து தென்மராட்சி தெற்குப் பகுதிகளான கைதடி, கோகிலாக்கண்டி, மறுவன்புலவு, தனங்கிளப்பு, நாவற்குழி ஆகிய பகுதிகளில் நிலைகொண்டுள்ள கடற்படையினர் அப்பகுதிக் கடற்றொழிலாளர்கள் மீது சோதனைக்கெடுபிடி, பாஸ் நடைமுறை, கடற்பாதுகாப்பு வலயநடைமுறை, மீன்பிடிக்கத் தடை விதித்தல், மீனவர் உடமைகளைக் களவாடுதல், சேதப்படுத்தல், மீனவர்களைத்தாக்குதல் போன்ற கெடுபிடிநடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறான படையினரது கெடுபிடிகள் உரிமைமீறல்கள் என்பவற்றால் பாதிக்கப்பட்ட சுமார் 100 மீனவர்கள் கையெழுத்திட்டு இம் மகஜரை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பதிகாரி ஆர்.பிரியதர்சனவிடம் கையளித்துள்ளனர். (33)

# யாழ்.இல் பாலர் கல்விக்கான மாதிரி வகுப்பறைகள்

(வடமராட்சி)

ஆரம்பக் கல்வித்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் ஏழு பாடசாலைகளுக்கு பாலர் கல்விக்கான மாதிரி வகுப்பறைகள் கட்டி வழங்கப்படவுள்ளன.

இதற்கென சுமார் 1.25 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வடகிழக்கு மாகாண சபையின் கல்வி மற்றும் பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

உரும்பிராய் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, நீர்வேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, வண்ணைநாவலர் வித்தியாலயம், சென்.சாள்ஸ் வித்தியாலயம், திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் முத்துத் தம்பி வித்தியாலயம், நல்லூர் சாதனா தமிழ்க் கலவன் பாடசாலைகளிலேயே இம் மாதிரி வகுப்பறைகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இதேவேளை மேற்படித் திட்டத்தின் கீழ் வடமராட்சிப் பகுதியிலுள்ள ஆறு பாடசாலைகளிலும் மாதிரி வகுப்பறைகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இந்நிர்மாணப்பணிகளுக்கென சுமார் ஒரு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, கற்கோவளம் மெதடிஸ்மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை, புற்றளை மகாவித்தியாலயம், வல்வெட்டி இந்துத் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் மாணிக்கவாசகர் வித்தியாலயம், மணியகாரத்தோட்டம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை என்பவற்றிலேயே இம்மாதிரி வகுப்பறைகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. (27)

# பனம் பொருள் ஆராய்ச்சி நிலையத்தை புனரமைத்து இயங்க வைக்குக

## - பனம் பொருள் உற்பத்தியாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கைதடியிலுள்ள பனம் பொருள் ஆராய்ச்சி நிலையத்தை புனரமைப்புச் செய்து, மீள இயங்க வைப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பனம் பொருள உற்பத்தியாளர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பனைவளம் அதிகம் காணப்படும் யாழ். குடாநாட்டில் பனை வளத்தை நம்பி வாழும் மக்களின் தொழில்ரீதியான மேம்பாட்டினை ஏற்படுத்துவதற்காகவும், பனை வளத்தின் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய உற்பத்திப் பொருட்கள் தொடர்பாக புதிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் பொருட்டும் இதை புனரமைக்குமாறு கேட்டுள்ளனர். யாழ். கைதடி பகுதியில் நிறுவப்பட்டிருந்த பனம் பொருள் ஆராய்ச்சி நிலையம் கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்புக்களின் போது சேதமாக்கப்பட்டது.

இதனால் யாழ். குடாநாட்டின் பனம் பொருள் உற்பத்தியாளர்களின் தொழில் மேம்பாடுகள் பாதிப்படைந்திருப்பதைச் சுட்டிக்காட்டியே உற்பத்தியாளர்களால் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (33)

# பிறப்பு, இறப்பு குறித்து பதிவு செய்ய கோரிக்கை

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதிகளில் பிறப்பு, இறப்புக் குறித்து சரியான புள்ளி விபரங்களை எடுக்க பிரதேச செயலகத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன தென்மராட்சிப் பகுதியில் உள்ள அனைத்துக் கிராம சேவகர் பிரிவினூடாக பொது மக்கள் பிறப்பு-இறப்பு குறித்த விவரங்களை பதிவு செய்யும்படியும், பதிவு செய்தவர்களுக்கு பிறப்பு, இறப்புக்கான அத்தாட்சி பத்திரம் சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் மூலமாய் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. (28)

# பொது அறிவுப் பரீட்சை

உள்ளூராட்சி மன்றத்தின் வாரத்தை முன்னிட்டு பச்சிலைப்பள்ளி பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசத்தால் நடாத்தப்படும் பொது அறிவுப்பரீட்சை இன்று காலை 10 மணி தொடக்கம் 11.00 மணிவரையும் நடைபெற இருக்கின்றது. இப்பரீட்சையில் 210 பரீட்சாத்திகள் பங்குபற்றுகின்றனர். அவர்களுக்கு ஐந்து பரீட்சை நிலையங்களில் அதாவது 1. மாசார் அ.த.க.பாடசாலை 2. பளை மத்திய கல்லூரி 3. புலோப்பளை றோமன் கத்தோலிக்கப்பாடசாலை 4. சோறன்பற்று சி.சி.த.க பாடசாலை 5. இயக்கச்சி அ.த.க.பாடசாலை

ஆகிய நிலையங்களில் நடைபெறவுள்ளன. இப்பரீட்சைக்கு விண்ணப்பித்து அனுமதி அட்டை கிடைந்தவர்கள் அவ்வப் பரீட்சை நிலையங்களுக்குச் சென்று பரீட்சையில் தோற்றுமாறும், பரீட்சைக்கு விண்ணப்பித்து அனுமதி அட்டை கிடைக்காதவர்கள் உங்களுக்கு அருகாமையில் உள்ளபரீட்சை நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் க.ரதீஸ்குமார் கேட்டுக்கொள்கின்றார்.

# கொள்ளுப்பிட்டி தாக்குதல் குறித்த விசாரணைக்கு புலனாய்வுப் பிரிவினர் அடுத்த வாரம் யாழ்.செல்வர்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் இடம் பெற்ற தற்கொலைத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவென சிறிலங்காவின் புலனாய்வுப் பிரிவினர் குழு ஒன்று அடுத்த வாரமளவில் யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளது.

கடந்த 7ஆம் திகதி கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்ற தற்கொலைக குண்டுத் தாக்குதலை நடத்திய பெண் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர் என்பதனாலேயே இக்கழுவினர் யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளனர். இவ்வாறு வருகைதரவுள்ள இக்குழுவினர் யாழ்ப்பாணத்தில் சம்பந்தப்பட்ட குண்டுதாரிதொடர்பான விசாரணைகளை மேற்கொள்வர்ரென யாழ்.பொலிசார் தெரிவித்தளர். (33)

# உரிமங்களைப் பெறாது இயங்கும் உணவகங்களை மூடநடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

உணவகங்களை நடத்துவதற்கான உரிமங்களை பெறாது இயங்கிவரும் உணவகங்களை மூடுவதற்குரிய நடவடிக்கைகள் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

சுகாதாரம், சுத்தம் என்பவற்றைப்பேணாது இயங்கிவரும் உணவகங்களால் யாழ்ப்பாண மக்கள் எதிர்கொள்ளும் சுகாதாரப் பிரச்சினைகள் மற்றும் தொற்றுநோய்த் தாக்கங்கள் போன்ற பிரச்சினைகளைக் கவனத்திற்கொண்டே இந்நடவடிக்கையை பொதுச் சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதனடிப்படையில் உணவகங்களுக்கான உரிமங்களை சோதனை செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது. (33)

## சமூகக் கல்விப் போட்டி

யாழ்.கோப்பாய் கோட்டக்கல்விப் பிரிவில் உள்ள பாடசாலைகளுக்கிடையிலான சமூகக் கல்விப போட்டி எதிர்வரும் 25 ஆம் திகதி நீர்வேலி இந்துக்கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இதில் மேற்படி கோட்டப்பிரிவில் உள்ள பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டு தமது திறமைகளை வெளிப்படுத்தவுள்ளனர். (33)

## முன்னோடிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தரம் 05 இற்கான புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை ஒன்றை நடத்த யாழ. வலயக்கல்விப் பணிமனை தீர்மானித்துள்ளது.

அந்த அடிப்படையில் எதிர்வரும் 1ஆம் திகதி பாடசாலை ரீதியாக நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள இப்பரீட்சைக்கான ஏற்பாடுகள் தற்பொழுது மேற்கொளளப்பட்டு வருகின்றன. (33)

# விலை நிர்ணயம் குறித்து யாழ்.இல் முக்கிய கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கான விலை நிர்ணயம் சம்பந்தமான முக்கிய கூட்டம் ஒன்று எதிர்வரும் 19ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் யாழ் செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். அரச அதிபர் தலைமையில் இடம்பெறவுள்ள இக்கூட்டத்தில் திணைக்களத் தலைவர்களும் வியாபாரத்துறைசார் பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். இதில் யாழ். மாவட்ட மக்களின் பொருளாதார நிலைமைகளுடன் ஒத்துப்போகக் கூடிய விலைநிர்ணயத்தை ஏற்படுத்துவது தொடர்பாக ஆராயப்படவுள்ளது. (33)

# தென்மராட்சியில் 04 குளங்களை புனரமைக்க நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள 04 குளங்களைப் புனரமைப்புச் செய்வதற்கென "நியாப்" திட்டத்தின் கீழ் 69 இலட்சத்து 57 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மேற்குப் பிரதேசத்தில் உள்ள கிராம அபிவிருத்தியை மையமாகக் கொண்டே இக்குளங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

அந்தவகையில் சந்திரன் கிராய்குளத்திற்கு 18 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாவும் நுணாவில் குளத்திற்கு 9 இலட்சத்து 99 ஆயிரம் ரூபாவும், கொல்லன கிராய் குளத்திற்கு 10 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாவும் கோம்பயன் குளத்திற்கு 30 இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.(33)

# பாதிக்கப்பட்ட பகுதிகளை ஜப்பானியக்குழு பார்வையிட்டது.

போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட தென்மராட்சிப் பகுதிகளில் விவசாயம்-மீன்பிடி தொழில்களை ஊக்கப்படுத்துவதற்காக மூன்று பேர் கொண்ட தூதுக்குழுவினர் கடந்த புதன் கிழமை தென்மராட்சிப் பகுதிகளை பார்வையிட்டனர். சாவகச்சேரி-கைதடியில் அமைந் துள்ள கமநல சேவை நிலையத்தை பார்வையிட்டு இப்பகுதியில் முன்னெடுக்கப்படவேண்டிய விவசாயப்பணிகள் குறித்தும் அதற்குத் தேவையான பங்களிப்புகள் குறித்தும் விரிவாக நேற்று ஆராயப்பட்டது. தென்மராட்சிப் பிரதேச செயலகம் மூலமாய் இப்பகுதிகளில் இத்திட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. (28)

# 20 வருடங்களாக புனரமைப்பின்றி காணப்படும் மண்டைதீவு வீதி

(யாழ்ப்பாணம்)

யாழ். தீவகத்தில் உள்ள மண்டைதீவு வீதி 20 வருடங்களுக்கு மேலாக புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் காணப்படுகிறது.

மக்கள் போக்கு வரத்துச் செய்யமுடியாத நிலையில் மோசமாகச் சேதமடைந்து போயிருப்பது குறித்து முறைப்பாடுகளை பல தரப்பினிடமும் விடுத்திருந்தும் உரியநடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதேவேளை மேற்படி வீதியை புனரமைப்பதற்கு நடவடிக்கைகளை பல தடவைகள் எடுத்தும் அதற்குப் படையினர் பெரும் முட்டுக்கட்டையாக இருந்து வருவதாகவும் தெரியவருகிறது. (33)

# நிறுவைகள் அளவைகள் கருவிகளுக்கு முத்திரையிடல்

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வர்த்தகர்கள் தங்களுடைய நிலுவைகள் அளவைகள் கருவிகளுக்கு வரும் 19,20,22,23 ஆகிய தினங்களில் சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவு சங்கத்தலைமை அலுவலகத்தில் காலை 9.00 மணியிலிருந்து மதியம் 1.30 மணிவரை முத்திரையிட்டுக் கொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இச்சேவை யாழ்ப்பாணம் கச்சேரியின் அளவீடும் அலகுகளும் நியமனங் கள் சேவைகள் பகுதியினரால் மேற்கொள்ளப்பட உள்ளதாகச் சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் தெரிவித்துள்ளார். (28)

# கணினியைத் தாக்கும் மின்னல்


தற்போது உலகில் பல பாகங்களிலும் பல்வேறு பட்ட பணிகள் கணினி மயப்படுத்தலின் மூலமே செய்து கொள்ளப்படுகின்றன. எனினும் ஏனைய வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளைப் போன்று கணினி யையும் இடிமின்னல் தாக்குவது அறியப்பட் டுள்ளதாக ஜிம் ரிவர்ட் என்ற கணினி சேவைகள் பணிப்பாளர் தெரிவிக்கிறார்.

மின்னல் தாக்குதலுக்கிலக்காகி அமெரிக்காவில் கணினிச் சேவைகள் பாதிக்கப்பட்டதாகவும், இதனால் இரண்டு மில்லியன் டொலர்கள் நட்டமடைந்ததாகவும் அவர் தெரிவிக்கிறார்.

காலநிலையில் ஏற்படும் மாற்றங்களினால் மின் சாதனப் பொருட்களுக்கு பாரிய சேதம் ஏற்படுவதால் மின்னலிலிருந்து பாதுகாத்துக் கொள்ள கருவி யொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரி விக்கிறார்.


இதனைப் பாவிப்பதன் மூலம் பெரும் பொருட் சேதங்களைத் தவிர்க்க முடியுமென அவர் கூறுவதுடன் அக்கருவி பொருத்தியபின்பு அதனை சிறந்த முறை யில் பராமரிக்க வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார். முதலாவதாக குறைந்தது ஒரு வருட இடைவெளி யிலாவது இக்கருவியைப் பரிசோதனை செய்ய வேண்டும். கணினியிலிருந்து வேறு சாதனங்களுடன் பொருத்தப்பட்டுள்ள மின் இணைப்பை அகற்றுதல் வேண்டும். (உ+ம் தொலைபேசி) காரணம் இவற்றுக் கூடாக கணனியை மின்னல் தாக்கலாம்.

கணினியை உலர்ந்த ஆனால் குளிரான இடத்தில் வைத்து வெப்பம் அதிகரிக்கா வண்ணம் பாதுகாக்க வேண்டும். கோடை வெப்பமும் கணினியைப் பாதிக்



கும் ஒரு காரணியாகும். எனவே இவ்வகையான நடை முறைகளைக் கைக்கொள்வதன் மூலமும் மின்னலில் இருந்து பாதுகாக்கும் கருவியை பொருத்துவதன் மூலமும் கணினிகளைப் பாதுகாத்து அழிவில் இருந்து தப்பிக்கொள்ள முடியும் என மேற்படி விஞ்ஞானி ஜிம் ரிவர்ட் தெரிவித்துள்ளார்.

# நீரிலும் நிலத்திலும் ஓடும் கார் அறிமுகம்





பிரித்தானிய ரிச்சர்ட் பிரான்சன் புதுவகை வாகனம் ஒன்றைத் தயாரித்துள்ளார். இது இங்கிலாந்தையும் பிரான்சையும் இணைக்கும் கால்வாயூடாகச் செலுத்தப்பட்டு உலக சாதனையை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வகைக் கார் நீரிலும் நிலத்திலும் ஓடக் கூடியதாகும். நிலத்தில் அதன் மணித்தியால வேகம் நூறு மைலுக்கு மேலாகவும், நீரில் 30 கடல் மைல்களாகவும் இருக்கிறது. இதற்கு "டோவர்"என பெயரிடப்பட்டுள்ளது.

## தெரிந்து கொள்ளுங்கள்

மனிதர்கள் அவரவர் உடல் நிலைக்கு ஏற்ப எவ்வளவு நேரம் தூங்கவேண்டுமோ அவ்வளவு நேரம் தினமும் தூங்கினால் மனமும் உடலும் ஆரோக்கியமாக இருக்கும். தேவையான நேரத்தை விட 1 மணி நேரமோ சில மணி நேரமோ குறைவாகத் தூங்கி எழுந்தால் அந்தகுறிப்பிட்ட மனிதர்களின் உடல்எடை அதிகரிக்கும். கொழுப்புச் சத்தும் உடலில் அதிகமாகிவிடும்.

தூங்கும் நேரம் பாதிக்கப்பட்டால் உடலில் சில திரவங்கள் சுரப்பதும் பாதிக்கப்படும். பகல் வேளையில் சாப்பிடும் உணவை செரிக்கச் செய்ய சில குறிப்பிட்ட திரவங்கள் உடலில் சுரப்பது அவசியம். இரவில் தேவையான நேரம் தூக்கம் இருந்தால் மட்டுமே இந்த சுரப்பிகள் ஒழுங்காக சுரக்கும். தூக்கம் பாதித்தால் திரவங்களும் சரியாக சுரக்காது. எனவே ஜீரண சக்தியும் குறையும். உடல் எடையும் அதிகரிக்கும்.




ஜூன் 28இல் 'காஸினி' விண்கலம் சனியின் துணைக்கோளான 'டைட்டான்'னுடைய வெளிப்புறத்தைச் சென்றடைந்தது. சோதனைக்கான உயர்திறன் கொண்ட 'அன்ரனா'வுடன் பறந்த 'காஸினி' விண்கலத்தின் மூலம்டைட்டானின் மீதேன், எதேன் மற்றும் அதிக நைதரசன் வாயுக்களின் அடர்ந்த காலநிலை ஊடான சனியின் பின்னணி காணப்படுகின்றது.

மெல்லிய மீதேன் முகில்கள் தொடுவானத்தைக் குறிக்கின்றது. அத்துடன் அகன்ற மீதேன் ஊற்று அல்லது 'மீதேன் வீழ்ச்சி' உயரத்தில் இருந்து வீழ்ந்து அதிகமானவை ஆவியாகின்றன.

அழகான ஐஸ் படிமங்கள் மீதேன், எதேன் ஏரியில் இருந்து கிளம்பி குழிகளின் சுவர்களில் தூரத்தே காணப்படுகின்றன. காஸினி விண்கலம் ஜூன் 30இல் சனியின் சுற்றுப் பாதையை அடைந்தது.

# செல்லப்பிராணிகளால் ஆபத்து!



நாய், பூனை போன்ற வளர்ப்புப் பிராணிகள் மூலம் அலர்ஜியை உண்டு பண்ணும் நுண் கிருமி களை பரப்பும் என்பது அனை வரும் அறிந்ததே. ஆனால் வளர்ப் புப் பிராணிகள் வீட்டை விட்டு வெளியே சென்றால் தான் அலர்ஜி கிருமிகள் பரவும், வீட்டுக்குள் ளேயே இருந்தால் பரவாது என்று பலர் நினைத்துக் கொண்டு இருக் கிறார்கள். இது மிகவும் தவறு.

பூனை, நாய், வளர்க்கும் வீடுக ளில் அவை ஒரு பகுதியில் மட்டும் நடமாடினாலும் கூட வீடு முழுக்க அலர்ஜியை உண்டு பண்ணும் நுண கிருமிகள் பரவுகின்றன என்பது ஒரு ஆய்வில் தெரியவந்துள்ளது. ஆக, இந்த வளர்ப்புப் பிராணி களால் வீடு முழுக்க நுண் கிருமி கள் எளிதாக பரவி விடுகின்றன. இதனால் அத்தகைய வீடுகளில் வசிக்கும் மனிதர் களுக்கு அலர்ஜி வருவதற்கான வாய்ப்பு எளிதாகி விடுகிறது.

வளர்ப்புப் பிராணிகள் ஓரிடத்தில இருந்து மற்றொரு இடத்துக்குச் சென்று கொண்டே இருக்கு மென்ப தால் கிருமிகளை முழுமையாக ஒழிக்க முடியாது. ஆகையால் அலர்ஜி தொந்தரவு உள்ளவர்கள் வளர்ப்புப் பிராணிகள் குறித்து மறு பரிசீலனை செய்ய வேண்டும். ஏற்க னவே வளர்ப்புப் பிராணிகள் வைத் திருப்பவர்கள் அலர்ஜி வராமல் தடுக்கத் தகுந்த நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டும்.

# புகையிலை தொடர்பான காரணிகளால் 6.5 வினாடிகளுக்கு ஒரு மரணம்...!

புகையிலை தொடர்பான காரணங்களால் ஒவ்வொரு 6.5 விநாடிகளுக்கும் ஒரு மனிதன் உயிரிழக்கிறான். இந்நிலை பெரும் பாலும் வளரும் நாடுகளில்தான் காணப்படுகிறது. மனித சமுதாயம் எளிதாகத் தடுக்க இயலும் மனித இழப்பையும், பொருளாதார இழப்பையும் தாங்கிக் கொள்ள முடியாது என்று ஐ.நா.வின் சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

உலகம் முழுவதும் ஆண்டுதோறும் 4.9 மில்லியன் மக்கள் புகையிலை காரணங்களால் உயிரிழக்கிறார்கள். அடுத்த 20 ஆண்டுகளில் இது இரட்டிப்பாகும். அதே சமயம் புகையிலை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேபோகிறது. தற்போது 1.3 பில்லியன் பேர் புகையிலை பயன்படுத்துகிறார்கள். 2025ம் ஆண்டு வாக்கில் இது 1.7 பில்லியனாக உயரும்.

புகையிலை பயன்படுத்துபவர்கள் பெரும்பாலும் வளரும் நாடுகளில் தான் உள்ளனர். உலகின் மொத்த புகையிலை பயன்படுத்துபவர்களில் 84 சதவீதம் பேர் இந்த நாடுகளில்தான் காணப்படுகின்றனர். ஏற்கனவே பொருளாதார நிலையில் தள்ளாடும் அந்த நாடுகளுக்கு இதனால் மேலும் கூடுதல் செலவு ஏற்படுகிறது. இதனால் அந்த நாடுகளின் பொருளாதாரம் மேலும் சீர்கெடுகிறது. இவ்வளவு மோசமான விளைவுகளை உண்டு பண்ணும் புகையிலையால், அது பயிர் செய்பவர்களுக்குக் கூட இலாபம் கிடைப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே கடந்த ஆண்டு புகையிலைக்கு எதிரான ஒப்பந்தத்தில் ஐ.நா.வில் அங்கம் வகிக்கும் 192 நாடுகளில் 118 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. மேலும் 16 நாடுகள் கையெழுத்திடுவதை உறுதி செய்துள்ளன. இதன்மூலம் உலகம் தழுவிய அளவிலான புகையிலை கட்டுப்பாட்டுத் திட்டத்தை வகுக்கமுடியும் என்று நம்பப்படுகிறது.

# மோட்டார் வாகனங்களின் வரலாறு



உலகில் மோட்டார் சைக்கிள், இயந்திரப்படகு, பெற்றோலில் இயங்கும் வாகனம், வாயுவினால் இயங்கும் வாகனம், 4 சில்லு வாகனம் என்ற அனைத்தையும் முதன் முதலில் தயாரித்தவர் ஜேர்மனியின் கொட்லிப் டேம்ளர் ஆவார்.

எனினும் உலகில் முதன் முதல் காரை உற்பத்தி செய்தவர் என்ற பெருமையை அதே நாட்டைச் சேர்ந்த பெட்ரிக் பென்ஸ் பெறுகி றார். 1885 ஆம் ஆண்டில் அவர் தயாரித்த வாகனம் மூன்று சில்லு களைக் கொண்டதாகும். எடை 250 கிலோ (560 இறாத்தல்) குதிரை வலு 98 ஆயினும் இதற்கான அங்கீகாரம் (அனுமதிப் பத்திரம்) வழங்கப்பட்டது 1886, தை மாதமாகும்.


கொட்லிப் டேம்ளர் (GODLIV DAMELOR) சிறுவயது முதலே சாதாரண நூல்களை வாசிப் பதிலும் சிறுசிறு இயந்திரங்கள் தயாரிப்பதிலும் திறமை வாய்ந்த வராக இருந்தார்.

பின்னர் இவர் அங்குள்ள நிறுவ னம் ஒன்றில் பணிப்பாளராக பணி யாற்றியவேளை இவரது • இள மைக்கால நண்பனான "வில்ஹம் மேபக்" என்பவரைப் பணிக்கமர்த் தினார். அதன் பின்னர் அங்கு சேவையாற்றிய இவர்கள் சேவையை விட்டுவிலகி சுயமாகக் கைத் தொழில் செய்ய ஆரம்பித் தனர். அதன்படி !883 ஆம் ஆண்டு இவர்கள் அப்போதைய மோட்டார் சைக்கிளை (உந்துருளி) தயாரித்தனர்.

இதே காலப்பகுதியில் கால் பென்ஸ் என்பவரும் மோட்டார் வாகனம் ஒன்றைத் தயாரித்துக் கொண்டிருந்ததை டேம்ளர் அறியவில்லை. அதுவும் மூன்று சில்லுகளைக் கொண்டிருந்தது. அதனைத் தொடர்ந்து 1885 ஆம் ஆண்டு டேம்ளர் காப்யுரேட்டர் பொருத்தப்பட்ட வாகனம் ஒன்றை உருவாக்கினார். அது மணிக்கு 12 மைல் வேகத்தில் செல்லக் கூடியதாக இருந்தது.

இதன் பின்னர் இரு நண்பர் களும் இணைந்து பல்வேறு வாகனங்களைத் தயாரித்து தமது நிறுவனத்தை உயர்த்தினர். இவர்களின் உற்பத்திகளே "மேர்சிடஸ் பென்ஸ்" என்றும் டேம்ளர் பென்ஸ் என்றும் அழைக்கப்படுகிறது.

1844 ஆம் ஆண்டு பிறந்த "பெட்ரிக் பென்ஸ்" 1927 இல் மறைந்தார்.



# உறுதிமொழிகள் தாராளம் பாடசாலையின் நிலையோ அவலம்!



கிளிநொச்சி வலயக்கல்விப் பணிமனையின் ஆளுகை வரம்பிற்குட்பட்ட பூநகரிக் கோட்டத்தில் அமைந்திருக்கின்ற கிராஞ்சி அ.த.க.பாடசாலை ஆசிரியர் பற்றாக்குறை, தளபாடப் பற்றாக்குறை, வகுப்பறைக்கட்டடம் போதாமை, மலசலகூட வசதிகள் இல்லாதுள்ளமை போன்ற இன்னோரன்ன குறைகளுடன் அன்றாடக் கற்பித்தல் செயற்பாட்டை நகர்த்தி வருகிறது.

இந்நிலையில் இதன் கற்பித்தல் செயற்பாட்டில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற ஆசிரியர் பற்றாக்குறை பற்றி நாம் முதலில் நோக்குவோம்.

கிராஞ்சியின் மையப்பகுதியில் அமைந்திருக்கின்ற இந்தப் பாடசாலையில் ஆண்டு 01 முதல் 09வரையான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இவற்றில் மொத்தமாக 252 மாணவர்கள் கல்விகற்கின்றனர். இந்நிலையில் நான்கு நிரந்தர ஆசிரியர்கள் மாத்திரம் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். கல்வி அமைச்சின் திட்டத்தின்படி 252 மாணவர்களுக்கும் கற்பிப்பதற்கு 13 ஆசிரியர்கள் தேவை என்பதை

அ. லோகீசன்

இவ்விடத்தில் சுட்டிக்காட்ட வேண்டும். இதைவிட இப்போது நான்கு தொண்டர் ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். இவர்களில் மூவருக்கு தமிழீழ கல்விக்கழகம் 750 ரூபாய் கொடுப்பனவு வழங்குகின்றது. கியூடெக் 1000 ரூபாய் வழங்குகின்றது. ஒருவருக்கு எவருமே எந்தக் கொடுப்பனவும் வழங்குவதில்லை. இவர்கள் மனிதாபிமான அடிப்படையில் தான் கற்பித்துவருகிறார்கள்.

இந்த நிலையில் ஆசிரியர் பற்றாக்குறையால் பாடசாலை எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி பாடசாலையின் அதிபர் ஐ.கேசவன் அவர்களிடம் கேட்டபோது, அவர் திடுக்கிடும் தகவலைத் தெரிவித்தார்.

இந்தப்பாடசாலையில் கல்வி கற்பிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கின்ற நான்கு ஆசிரியர்களும் அடிப்படைக் கல்வி கற்பிப்பதற்குரிய ஆசிரியர்கள். அவர்களை வைத்துக்கொண்டு ஆண்டு 01முதல் 04வரையான வகுப்புக்களுக்கே கற்பித்து வருகிறேன். ஆண்டு ஐந்து - அதாவது புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள், இவர்களுக்குக் கற்பிக்க ஆசிரியர் இல்லை என்ன செய்வது? ஒரு தொண்டர் ஆசிரியர் தான் கற்பிக்கிறார் என்று கூறி முடிப்பதற்கிடையில்... குறுக்கிட்டு "ஆண்டு 06 முதல் 09 வரை என்ன செய்கிறீர்கள்? மாணவர்களின் நிலை எப்படி?" என்றேன்.

அதிபர் தளம்பலாகக் கூறினார். "தம்பி நான் என்ன செய்யிறது. ஆசிரியர் இல்லை, அதால கணிதம், தமிழ், விஞ்ஞானம்,



அண்மையில் கட்டப்பட்ட மலசலகூடம்

ஆங்கிலம், சித்திரம், சங்கீதம், உடற்கல்வி, சமூகக்கல்வி பாடங்கள் ஒன்றுமே நடக்கிறதில்லை. சமயத்திற்கு மட்டும் தான் சும்மா ஒரு ரீச்சர் படிப்பிக்கிறா" என்றார். அந்தப் பிள்ளையளின்ர எதிர்காலம் மண்ணாகிறது. இந்தப் பிள்ளைகளின் எதிர்காலம் எப்படியிருக்கப்போகிறது என்பதை கற்பனை செய்து பார்த்தால் மனக் குமுறலாக இருக்கிறது.

"சரி இப்படிக் கூறுகிறீர்கள்; நீங்கள் பாடசாலை அதிபர்; மாணவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய பொறுப்பு உங்களின் கைகளில் இருக்கிறது. நீங்கள் என்ன செய்தீர்கள்" என்று கேட்டேன்.

அதற்கு அதிபர், நான் எங்கள் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் தெரியப்படுத்தியிருக்கின்றேன் என்றார்.

"இந்த அவலம் எவ்வளவு காலமாக நிகழ்கிறது" என்று கேட்டபோது....

"இது நான்கு வருடங்களாக இப்படித்தான் இருக்கிறது. கடந்த 2003ஆம் ஆண்டு மூன்றாம் மாதம் எமக்கு ஒரு பட்டதாரி ஆசிரியரைத் தருவதாகக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. ஆனால் இன்று வரை அவர் கடமைக்கு வரவில்லை" என்று கூறி முடித்தார்.



தற்காலிக கொட்டகையின் நிலை

அடுத்ததாக நாம் தளபாடப்பக்கம் திரும்பினோம். மாணவர்கள் வகுப்பறைகளிலும், மரநிழல்களிலும் அமர்ந்திருந்தனர். சில வகுப்புகளில் ஆசிரியர்கள் கற்பித்துக் கொண்டிருந்தனர். சில வகுப்புக்கள் ஆசிரியர் இல்லாமல் இருந்தன.

தளபாடப் பிரச்சினை பெரும் பிரச்சினை. அதுவும் ஐந்து வருடங்களாக அப்படியேதான் இருக்கிறது. 252 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். ஆனால் 107 மாணவர்களுக்கு மாத்திரமே தளபாடம் இருக்கிறது. ஏனைய 150 மாணவர்களும் தரையில் அமர்ந்தே படிக்கின்றனர். ஆசிரியர் தளபாடங்களும் அதே நிலையில் தான் என்றார்.

அதிபருடன் கதைத்தவாறே பாடசாலையைச் சுற்றிப்பார்த்துக் கொண்டிருக்கையில் சில மாணவர்கள் அந்தப் பாடசாலையிலேயே வயது கூடிய மாணவர்கள் போல தெரிந்தது- ஒரு நீளமான மேசையின் இரண்டு பக்கங்களிலும் அமர்ந்திருந்தனர். மேசையின் ஒருபக்கத்தில் ஆசிரியர் அமர்ந்திருந்தார். அதிபரிடம் "இது என்ன நடக்கிறது" என்று கேட்டேன். அதிபர் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு "அது ஒரு பாண்பேக்கரி மேசை, தளபாடம் இல்லை என்று போய்க் கேட்டுவாங்கின்னாங் கள். என்றார். எமக்குக் கடந்த 2003 ஆம் ஆண்டு ஆவணி மாதத்துக்கிடையில் தளபாட வசதிகள் செய்து தரப்படுமென வலயக்கல்வித் திணைக்களத்தால் உறுதி அளிக்கப்பட்டது. ஆனால் இன்று ஒரு வருடமாகியும் இன்னும் வழங்கப்படவில்லை என்றார்.

வறுமைப்பட்ட கிராமத்தில் அமைந்திருக்கின்ற இந்தப்பாடசாலையின் கட்டட வசதிகளும் போதாமல்தான் இருக்கிறது. ஒரே ஒரு நிரந்தரக்கட்டடம் மாத்திரமே இருக்கிறது. அதில் நான்கு வகுப்புக்கள் தான் நடத்தமுடியும். ஏனைய ஐந்து வகுப்புக்களையும் நடத்துவது பெரும் கஷ்ரமான செயல்தான். ஐந்து வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட ஒரு தற்காலிகக் கொட்டகை இருக்கிறது. அது பயன்படுத்த முடியாத நிலையில்தான் இருக்கிறது. கூரை பிளாஸ்ரிக் சீற்றால் வேயப்பட்டிருக்கிறது. சுவர்கள் இடிந்த நிலையில் காணப்படுகின்றன. வகுப்பறையில் வெப்பம் தாங்க முடியாதுள்ளது. அதேபோல காற்று வீசுகின்ற வேளை, காற்று மண்ணையும் கூட வகுப்பறையில் அள்ளி வீசுகிறது.

அதேவேளை மலசலகூடம் இல்லாத நிலை காணப்படுகிறது. யுனிசெப் நிறுவனத்தால் கட்டிக் கொடுக்கப்பட்ட மலசலகூடம் திட்டமிடல் இல்லாது அமைக்கப் பட்டதால் அது இடிந்து வீழ்ந்துள்ளது.

இந்தப் பாடசாலையின் கல்வி நிலை இப்படி இருக்கின்ற அதே வேளையில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் வந்து பார்க்கிறார்கள் "அது செய்து தருகின்றோம், இது செய்து தருகிறோம்." என்கிறார்கள். ஆனால் எதுவும் செய்து தராமல் உறுதி மொழிகளுடன் காலம் நகர்ந்து செல்கிறது.

எது எப்படியோ வாக்குறுதிகளோடு நிற்காது இந்த மாணவச் செல்வங்களின் எதிர்

பாண் பேக்கரி மேசையில்



காலத்தில் சம்பந்தப்பட்ட அனைத் துத் தரப்பினரும் அக்கறையுடன் செயற்படுவார்களா...? என்பதே தற்போதுள்ள கேள்வியாகும்.

# ஓமந்தை-இறம்பைக்குளம் வீதியை மக்கள் போக்குவரத்துக்கு திறக்க வேண்டுகை

(செட்டிகுளம்)

வவுனியா ஓமந்தை இறம்பைக்குளம் வீதியினைத் திறந்து மக்களின் பாவனைக்கு அனுமதிக்குமாறு கோவில்குஞ்சுக்குளம் மக்கள், வவுனியா அரசஅதிபர், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சேவாலங்கா நிறுவனத்தால் அமைக்கப்பட்ட அரிசி ஆலையினை திறக்கச் சென்ற போதே மக்கள் இந்தக் கோரிக்கையினை விடுத்துள்ளனர்.

பாலமோட்டைப்பகுதியில் அமைந்துள்ள இந்த அரிசி ஆலையால் அப்பிரதேச விவசாயிகள் பெருநன்மையடைவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. அங்கு அப்பிரதேசத்தின் நெல் குத்தப்பட்டு ப.நோ.கூ சங்கங்களுக்கு .விநியோகிக்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த அரிசி ஆலையினைத் திறந்த பின்னர் மக்கள் இறம்பைக்குளம் ஓமந்தை வீதியினைத் திறந்து தமது பாவனைக்கு விடுமாறும் சாதாரணமாக 5கிலோமீற்றர் தூரம் உள்ள இந்த வீதி மூடப்பட்டு இருப்பதால் ஒவ்வொருவரும் 45கிலோமீற்றர் மேலதிகமாக பிரயாணம் செய்ய வேண்டி இருப்பதாக அம்மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். இது சம்பந்தமாக வவுனியா அரச அதிபரும் ,வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் சிறிலங்கா இராணுவத்தினரோடு கதைத்து வீதியினைத் திறப்பதற்கு ஏற்பாடு செய்து தருவதாக உறுதி அளித்துள்ளனர். (21)

# புலனாய்வு அதிகாரி கொலை; கைதான மூவரும் விடுதலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அருகில் வைத்து கடந்த மாதம் 19 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்ட சிறிலங்காப் புலனாய்வுத்துறை பொலிஸ் அதிகாரியின் கொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மூவரும் கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.

திராய்மடுவைச் சேர்ந்த சிவலிங்கம் சிவகுமார், அக்கரைப்பற்றில் கைது செய்யப்பட்ட வந்தாறு மூலையைச் சேர்ந்த பேரின்பம் ஜெயக்குமார், சங்கமன்கண்டியைச் சேர்ந்த சரவணமுத்து சாந்தகுமார் ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்களாவர்.

இவர்கள் மூவரையும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் பொலிசார் ஆஜர் செய்தனர். விசாரணைகளை நீதிபதி ஏ.எச்.எம் அஜ்மீர் மேற்கொண்ட போது வழக்குத் தாக்கல் செய்வதற்கு போதுமான ஆதாரங்கள் இல்லாததால் சந்தேக நபர்கள் மூவரையும் விடுவிக்குமாறு பொலிசார் அறிக்கை சமர்ப்பித்தனர். இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதி அவர்களை விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார்.

# இரத்த தானம் / குருதிக் கொடை

மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் பிறந்த நேரம் முதல் இறக்கப்போகின்ற இறுதி மூச்சுவரை சுவாசிக்கின்றனர். வளியில் உள்ள ஒட்சிசன் ($O_2$) வாயுவானது குருதிச் சுற்றோட்டங்கள் மூலம் உடற்கலங்களை சென்றடைகின்றது. இச்செயற்பாடு தொடர்ச் சியாக நடைபெறாவிட்டால் மூச்சுத் திணறல் ஏற்படுகின்றது. நாம் உயிர்வாழ்வதற்கு சக்தி அவசியம். அதற்காகத் தான் நாள்தோறும் மூன்று தடவை உண்கின்றோம். இவை இறுதியில் குளுக்கோசாக மாற்றப்பட்டு உடலின் சகல பாகங்களையும் சென்றடைய இரத்தமே துணை புரிகின்றது. உடலிலுள்ள கழிவுகளை அகற்றவும் இரத்தம் தான் உதவுகின்றது. ஒரு மனிதனுடைய உடலில் 5.5 லீற்றர் தொடக்கம் 6 லீற்றர் குருதி உள்ளது. குழந்தை தாயின் கருவில் உள்ள போது தாயின் இரத்தமே குழந்தையை சென்றடைகின்றது.

என்பு மச்சையால் உற்பத்தி செய்யப்படுகின்ற இரத்தத்தில் செங்குருதிக்கலம் (R.B.C), வெண்குருதிக்கலம் (W.B.C),குருதிச் சிறுதட்டுக்கள் (குருதி உறையாக் கலங்கள்) எனப்பலவகையுண்டு. இவற்றுள், செங்குருதிக்கலம் மிகப்பிரதானமானது. இதனுடைய ஆயுட்காலம் 120 நாட்களாகும். இவை செவ்வென்பு மச்சையில் உற்பத்தி செய்யப்பட்டு மண்ணீரலில் அழிக்கப்படுகின்றன. இவ்வாறு நாள்தோறும் 10 கோடிகலங்கள் அழிக்கப்பட அதே அளவு கலங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. நாம் வழங்குகின்ற இரத்தமும் மீளவும் உற்பத்தி செய்யப்படும். இரத்தம் கொடுப்பதனால் உடலுக்குப் பாதிப்பு ஏற்படும் என்ற தப்பான அவிப்பிராயம் எம்மில் பலரிடம் உள்ளது. எந்த வித பயமோ, தயக்கமோ இன்றி நாம் இரத்ததானம் வழங்க முன்வர வேண்டும். நாம் தானமாகக் கொடுக்கின்ற அரைப் பைந்தோ அல்லது ஒரு பைந் இரத்தம் இரத்த இழப்பிற்குள்ளான கர்ப்பிணித்தாயை, செப்ரிசீமியாவினால் பாதிக்கப்பட்ட குழந்தையை, கடுமையான காயத்திற்குள்ளான ஒருவரை, சில வேளைகளில் உங்களையே கூடக் காப்பாற்றலாம். உங்களுக்கு உயிராபத்தான காயங்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் இரத்த வங்கியால் உங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். உங்கள் இரத்த உறவுகளிற்கு ஆபத்தான நிலைமைகளில் முன்னுரிமை அழிக்கப்படவும் கூடும். இதனை விட உடல் நிறை, இரத்த நிலைப்பாடு (வகை,பிரிவு), இரத்த அழுத்தம், இரத்தம் தொடர்பான நோய்கள் என்பவற்றைக் கூட அறியக் கூடியவாறு இருக்கும்.

நாம் வழங்கிய இரத்தம் ஒரு வரை காப்பாற்றுமானால் நாம் பூரணமான மன நிறைவடைகின்றோம். 18 வயது வந்த ஒவ்வொரு ஆணும் பெண்ணும் இரத்ததானம் செய்யலாம். அவ்வாறே 55 வயது வரை இரத்ததானம் செய்யலாம். முதல் தடவை இரத்ததானம் செய்த பின்னர் 3மாதத்துக்கு ஒரு தடவை இரத்தம் வழங்கலாம். கர்ப்பிணித்தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், இரத்த சோகை உள்ளவர்கள், செங்கண் மாரி நோய் ஏற்பட்டவர்கள், 45 கிலோ நிறைக்குக் குறைந்தவர்கள், உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் ஆகியோரிடமிருந்து இரத்தம் பெறப்படுவதில்லை.

Aபிரிவு, Bபிரிவு, ABபிரிவு, Oபிரிவு என நான்கு வகையான இரத்தப் பிரிவுகள் உண்டு. இவற்றையும் பொசிடிவ், நெகடிவ் என இரு வகையாக வகைப்படுத்தலாம் இதில் O வகை இரத்தம் 45 வீதமானவர்களிற்கு உள்ளது. இவ் வகை இரத்தம் ஒரு பொது வழங்கியாகும். ஏனைய அனைத்து வகையினருக்கும் அதாவது A, B, AB,O இரத்த வகை உள்ளவர்களிற்கு ஏற்றப்படலாம் ஆனால் O வகை உள்ளவர்களிற்கு O வகை மட்டுமே ஏற்றப்படவேண்டும். நெகடிவ் (O-) உள்ளவர்களிற்கு குறிப்பாய் பெண்களிற்கு O- குருதி மட்டுமே ஏற்றப்படலாம். எனவே தான் O-இரத்தம் இருப்பவர் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். உயிராபத்தான நிலையிலும், கர்ப்பிணித்தாய்மார்களிற்கும் O- இரத்தம் உள்ளவர்கள் இரத்ததானம் வழங்க முன்வர வேண்டும். முக்கியமாக பெண்கள் திருமணமாகி தாயாகும் போது இரத்த வகையைப் பரிசோதித்து அறிந்து கொள்ள வேண்டும். மனைவிக்கு O- இரத்தமும் கணவனுக்கு வேறுவகை இரத்தமும் உள்ளவர்கள் குழந்தை பிறக்கின்ற போது தமக்குத் தெரிந்த O- இரத்தம் உடையவரை இரத்த தானம் செய்ய முன்கூட்டியே ஏற்பாடுசெய்து கொள்ள வேண்டும். இதனால் -குழந்தைக்கும் தாய்க்கும் ஏற்படும் உயிராபத்தைத் தடுக்கலாம்.

**சி.ஜெயதீபன்**
**(பயிற்சி ஆசிரியர்/சென்ஜோன்ஸ் முதலுதவிப் படையணி)**

Aவகை இரத்தம் 25 வீதமானவர்களிற்கு உள்ளது. Aவகை இரத்தத்தை A வகையினருக்கும், AB வகையினருக்கும் மாத்திரம் ஏற்றலாம். Bவகைக் குருதி 20 வீதமானவர்களிற்கு உள்ளது. B வகை இரத்தத்தை B வகையினருக்கும் AB வகையினருக்கும் ஏற்றலாம். ABவகை குருதி 10 வீதமானவர்களிற்கு உள்ளது. ABவகை இரத்தத்தை ABவகைஇரத்தம் உள்ளவர்களுக்கு மட்டுமே ஏற்றலாம். ஏனையோருக்கு ஏற்றமுடியாது. ஆனால் ABவகை இரத்த முள்ளவர்களுக்கு ஏனைய அனைத்து வகை இரத்தத்தையும் ஏற்றலாம். எனவே தான் இதனைப் பொது வாங்கி என அழைக்கப்படுகின்றது.

## இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்து பாராளுமன்றில் மூன்று நாட்கள் விவாதம்

தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்து மூன்று நாள் விவாதம் சிறிலங்காப் பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

ஒத்திவைப்புக் கோரிக்கையாக இந்த விவாதம் நடைபெறும் எனத் தெரிவித்துள்ள பாராளுமன்றத்தின் பொதுச் செயலாளர் இம்மாதம் 20ஆம் 21ஆம் 22ஆம் திகதி இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இந்த விவாதத்திற்கான கோரிக்கையை ஜாதிக ஹெல உறுமய விடுத்திருந்ததாகத் தெரிவித்துள்ள பாராளுமன்றத்தின் பொதுச் செயலாளர், இதற்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இணக்கம் தெரிவித்துள்ளதாகவும், இம்மாதம் 19ஆம் திகதி நடைபெறவுள்ள கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இவ்விடயம் குறித்து மேலும் கலந்துரையாடப்படும் எனவும் கூறியுள்ளார்.

## உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு குறைகேள் அதிகாரிகள் நியமனம்

(கொழும்பு)

நாட்டின் அனைத்து உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கும் குறைகேள் அதிகாரி ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாக மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

இதற்கான அதிகாரத்தை அரசியல் யாப்பு வழங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடு தழுவிய உள்ளூராட்சி வாரம் எதிர்வரும் 19ஆம் திகதி முதல் 25ஆம் திகதிவரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அமைச்சர் இக்கருத்தினை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; உள்ளூராட்சி சபைகளுக்கான சேவைகள் மேலும் துரிதப்படுத்தப் படவுள்ளதாகவும், இதற்கான செயற திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் குறைகேள் அதிகாரிகளின் நியமனம் மாகாண சபைகளினதும், உள்ளூராட்சி அதிகாரசபைகளினதும் அதிகாரத்திற்குள் வலுப்படுத்தப்படுமென்றும் அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோன் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆயுதங்கள் குறித்த ஒப்பந்தத்தில் சிறிலங்கா கைச்சாத்திடும்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் வருடாந்தக் கூட்டத் தொடரின் போது, அணுவாயுதங்கள் தவிர்ந்த ஆயுதங்கள் தொடர்பான ஒப்பந்தமொன்றில் சிறிலங்கா அரசாங்கம் கைச்சாத்திடவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சு இது தொடர்பான அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளதுடன், இதற்கான ஆலோசனைகளை வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் வழங்கியிருப்பதாகவும், இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கான அமைச்சரவை அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதன் மூலம், நிலக் கண்ணி வெடிகளைப் புதைத்தல், நிலக்கண்ணி வெடிகளை வெடித்தல், தீப்பற்றும் ஆயுதங்கள், கதிரியக்க ஆயுதங்கள் போன்ற ஆயுதங்கள் தொடர்பான சர்வதேச கொள்கைகளுடன் சிறிலங்காவும் ஒன்றிணைந்து செயற்பட முடியும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன், தற்கொலைக் குண்டுகள் தொடர்பான சட்டமாகிய "ஒற்றாவா" சட்டத்தின் கீழ் அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்கும் சிறிலங்கா அரசாங்கம் தீர்மானி த்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

## கொழும்பு—மட்டக்குளியில் தமிழர் ஒருவர் கைது

(கொழும்பு)

கொழும்பு மட்டக்குளி பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை சந்தேகத்தின் பேரில் தமிழர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து இரண்டு சயனைட் வில்லைகள் கைப்பற்றப்பட்டதாக முகத்துவார பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எஸ். விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். கைது செய்யப்பட்ட நபரினைத் தொடர்ந்தும் விசாரணை செய்துவருவதாக முகத்துவாரப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

### —கொஸ்கொட பிரதேசத்தில்—

## பொலிசாரின் நடவடிக்கையை கண்டித்துஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொஸ்கொடப் பிரதேசத்திலுள்ள பொலிஸ் நிலையமொன்றின் முன்னால் கடந்த புதன் கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இதுபற்றி மேலும் தெரிய வருகையில் இப்பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்துச் சம்பவம் தொடர்பாகப் பொலிசார் நடந்து கொண்ட விதத்தினையடுத்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது பொலிசார் கலகத்தில் ஈடுபட்டவர்களைத் தடுத்து நிறுத்தும் நோக்குடன் கண்ணீர்ப் புகைப் பிரயோகத்தினை மேற்கொண்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த பொதுமக்களும், பொலிசாரும் பம்பலப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இதன்போது கைதுசெய்யப்பட்ட 46பேரில் 40 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். எஞ்சிய 6 பேரும் பிணையில் விடுதலை செயயப்பட்டுள்ளதாக கொஸ்கொட பொலிசார் தெரிவித்துள்ளனர்.

### -பேச்சு வார்த்தையை ஆரம்பிக்க-

## அரசு எடுக்கும் முயற்சி குறித்து பொதுநலவாய அமைச்சர் பாராட்டு

(கொழும்பு)

பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தற்போதைய அரசாங்கம் மேற்கொள்கின்ற முயற்சி குறித்து பொதுநலவாய அமைப்பின் இராஜாங்க அமைச்சர் பாராட்டியுள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமருடன் பிரிட்டிஷ் பிரதிநிதிகள் சபை மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதன் போது இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## வரலாறு காணாத மலிவு விற்பனை

**கொழும்பு ஜெயா புக் சென்ரரின்** அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது தடவையாக வரலாறு காணாத மலிவு விற்பனை நடைபெறவுள்ளது.

| | |
|---|---|
| காலம்:- | 2004 ஜூலை 19 முதல் 29 வரை |
| நேரம்:- | தினமும் காலை 9.00 மணிமுதல் 6.00 மணிவரை (புதிய நேரம்) |
| இடம்:- | யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம். |

❋சகலருக்கும் இலங்கை நூல்களிற்குப் 10% கழிவு வழங்கப்படும்.
❋பிறநாட்டு வெளியீடுகளுக்கு 15% கழிவு வழங்கப்படும்.
❋மொத்தமாகக் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலங்கை வெளியீடுகள் தவிர பிறநாட்டு வெளியீடுகள் (ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது 10 பிரதிகள்) கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவாக 20% வழங்கப்படும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரிகள், கல்வியற் கல்லூரி, பொது நிறுவனங்கள் பிரதேசசபை, நூலகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களிற்குக் கடன் அடிப்படையில் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு
வணிக மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(சி-10025)

# பொடோ சட்டத்தை இரத்துச் செய்யும் சட்ட முன்வரைவு யோசனை தயார்

(புதுடில்லி)

**பொடோ சட்டத்தை இரத்துச் செய்வதற்கான சட்ட முன்வரைவு யோசனைகளை மத்தியரசு தயாரித்துள்ளது. இதனை நடப்புக் கூட்டத் தொடரில் தாக்கல் செய்யவுமுள்ளது.**

பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த ஏற்கனவே பல சட்டங்கள் உள்ளன. அவற்றை வெளிப்படுத்துவது பற்றியும், பொடோ சட்டத்தை இரத்துச் செய்வது குறித்தும் விவாதங்கள் நடந்து முடிந்துள்ளன.

உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் தலைமையில் உள்துறை சட்டத்துறை உயரதிகாரிகள் மட்டத்தில் கூட்டம் நடைபெற்றுள்ளது.

இதில் இறுதி முடிவு எடுக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட சட்ட முன்வரைவு நடப்புக் கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

பொடோ சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டுமென்பதில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு உறுதியாக உள்ளது.

ஆனால் இதை தேசவிரோத சக்திகள் தமக்குச் சாதகமாக பயன்படுத்தி விடக்கூடாது என்றும் மத்தியரசு கூறியுள்ளது.

# நேபாளத்துடன் 1400 கிலோ மீற்றர் இணைப்புச்சாலை அமைக்க இந்.இணக்கம்

நேபாளத்தை இணைக்கும் விதமாக 1400 கிலோ மீற்றர் சாலை அமைக்க கொள்கை அளவில் இந்தியா ஒப்புக் கொண்டுள்ளது என்று இந்திய வெளியுறவுத்துறை செயலராக நியமிக்கப்பட்டுள்ள ஷியாம் சரண் தெரிவித்தார்.

ரூ.500கோடி செலவிலான இந்தச் சாலை அமைக்கும் பணி 5 ஆண்டுகளில் பூர்த்தியாகும். நேபாளத்தின் இந்தியத் தூதரகப் பணியாற்றிய ஷியாம்சரண் தற்போது வெளியுறவுத்துறைச் செயலராக நியமிக்கப்பட்டார். அதையடுத்து நேபாளத்தில் அவருக்கு நடைபெற்ற பிரிவு உபசார விழாவில் இதை அவர் தெரிவித்தார்.

# தமிழ் பேசும் பரீட்சார்த்திகளுக்கு சிங்களப் பிரதேசத்தில் பரீட்சை

தமிழ்மொழி மூல ஆசிரியர் ஆட்சேர்ப்புப் பரீட்சை எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறித்து விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத் தமிழ் மொழிப் பரீட்சார்த்திகளுக்கு அம்பாறை மேற்கிலுள்ள சிங்களப் பிரதேசத்தில் பரீட்சை நிலையங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. பெரிய நீலாவணை, கல்முனை சம்மாந்துறை, அக்கரைப்பற்று, பொத்துவில் வரையுள்ள தமிழ் மொழி மூலப் பரீட்சார்த்திகள் அம்பாறைக்கு அப்பாலுள்ள ஹிங்குறான, மகாஓயா, றஜகலதென்ன, உனசேரங்கட போன்ற தூர இடங்களுக்கு நேரகாலத்துடன் பயணித்துப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

## ஜனதா தளம் ஆதரவை விலக்கியது

(மும்பாய்)

மகாராஷ்டிரா மாநிலத்தில் மாநில கூட்டணி அரசிற்கு அளித்து வரும் ஆதரவைத் திரும்பப் பெறுவதாக மதசார்பற்ற ஜனதா தளம் முடிவு செய்துள்ளது. இதனையடுத்து மாநிலத்தின் அரசு கேள்விக்குறியாகியுள்ளது.

# நதிநீர் பகிர்வை பஞ்சாப் இரத்துச் செய்தது தவறான அணுகுமுறையென்கிறார் கருணாநிதி

(சென்னை)

மாநிலங்களிடையேயுள்ள நதி நீர்பகிர்வை பஞ்சாப் மாநிலம் இரத்துச் செய்துள்ளமை தவறான அணுகுமுறை என்று தி.மு.க தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர்.

நடுவர் மன்றம் நீதிமன்றம் அல்லது பேச்சுவார்த்தை மூலமாகவே இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டியது என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்பிரச்சினைக்கு காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியும் மன்மோகன்சிங் அரசும் தீர்வு காண முன்வந்திருப்பது ஆறுதலளிக்கும் விடயமாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

பஞ்சாப் மாநிலம் தனது அணுகுமுறையை கைவிட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை அயல் மாநிலங்களுடன் நதி நீர்ப் பகிர்வை பஞ்சாப் மாநில அரசு முறித்துக் கொண்டுள்ள பிரச்சினைக்கு குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் உடனடியாகத் தலையிட வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கேட்டுக் கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மன்மோகன்சிங் அரசு இப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணத தவறும் பட்சத்தில் குடியரசுத் தலைவர் உச்சநீதி மன்றத்தின் ஆலோசனையை நாடவேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினையில் பஞ்சாப் கர்நாடக அரசினைப் பின்பற்றுவதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன் மத்தியரசின் நான்கு மாநில ஆளுநர் பதவி நீக்க நடவடிக்கை தவறான முன் உதாரணம் என்றும் அவர் குறை கூறியுள்ளார்.

# ஐ.நா.வளர்ச்சித்திட்ட அறிக்கையில் இந்தியாவிற்கு 127 ஆவது இடம்

(புதுடில்லி)

ஐ.நா. சபையில் தயாரித்துள்ள ஐ.நா.சபை வளர்ச்சித் திட்ட அறிக்கையில் இந்தியா 127 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

மனிதவள மேம்பாட்டு குறியீட்டு எண் அடிப்படையில் 177 நாடுகளை இந்த ஆய்விற்கு ஐ.நா.சபை உட்படுத்தியுள்ளது.

இந்தத் தகவலை மத்திய செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் ஜெயபால் ரெட்டி நேற்று முன்தினம் புதுடில்லியில் கூறியுள்ளார்.

வயது வந்தோர் கல்வி, பாடசாலைகளில் மாணவர்கள் சேர்க்கப்படும் விகிதம், தனிநபர் வருமானம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டே ஐ.நா சபை இந்த அறிக்கையைத் தயாரித்துள்ளது.

கடந்த வருடமும் இந்தியா இதே இடத்தில் தான் இருந்தது. இதேவேளை பாகிஸ்தான் இம்முறை 142 ஆவது இடத்திலுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# நாட்டுப்பற்றாளர் நடேசன் குடும்பத்திற்கு இரண்டு இலட்சம் ரூபா அன்பளிப்பு

அகில இலங்கை தமிழ்த் தேசிய ஊடகவியலாளர்களின் பொதுக் கூட்டம் கொழும்பு ரண்முத்து ஹோட்டலில் புதன்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை சுதந்திர ஊடகவியலாளர் சங்கத் தலைவர் சுகந்த தேசப்பிரிய பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் நாட்டுப் பற்றாளர் நடேசனின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், அவரது குடும்பத்தவர்க்கு இரண்டு இலட்சம் ரூபாவுக்கான காசோலையை திருமதி கௌரி நடேசன் பெற்றுக் கொண்டார். இதேவேளை வீரசேகரி வடமராட்சி செய்தியாளரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளருமான எஸ். தில்லைநாதனின் வைத்திய செலவுக்கென சங்கம் 15,000 ரூபாவினை அன்பளிப்பாக வழங்கியது.

# அமர்நாத் யாத்திரிகர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும்

## காஷ்மீர் முதல்வர் இராணுவத்திடம் கோரிக்கை

(புதுடில்லி)

ஜம்மு காஷ்மீரிலிருந்து அமர்நாத் யாத்திரைக்கு வரும் யாத்திரிகர்களுக்கு முழுமையான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று பாதுகாப்புப்படை அதிகாரிகளுக்கு முதலமைச்சர் முக்தி முகம்மது சையத் உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அயன் காந்தில் நடைபெற்ற உயர் நிலைக் கூட்டத்தில் அவர் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் பல்வேறு சிவில் இராணுவம், துணை இராணுவம், காவல்துறையினரும் கலந்து கொண்டனர்.

தடங்கலின்றி அமர்நாத் யாத்திரிகர்கள் பயணம் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# பொலிஸ் பதவி உயர்வு குறித்து ஜே.வி.பி சனாதிபதி முரண்பாடு

(கொழும்பு)

சிறிலங்காவில் பொலிஸ் பிரிவில் பதவியுயர்வுகள் தொடர்பில் ஜே.வி.பி.இற்கும் சனாதிபதிக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

சனாதிபதியால் வழங்கப்பட்டுள்ள பதவியுயர்வுகள் ஐக்கிய தேசியக் கட்சியின் தேவைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட பட்டியலைக் கொண்டே வழங்கப்பட்டுள்ளதாகவும், இதில் முறைகேடுகள் பல இடம் பெற்றுள்ளதாகவும், இதனால் அதனை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் ஜே.வி.பி.கோரியுள்ளது.

இது தொடர்பான தமது கண்டனக் கடிதத்தை சனாதிபதிக்கு அனுப்பியுள்ளதாகவும் ஜே.வி.பியினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

# 05 புதிய பா.உறுப்பினர்களுக்கு 20 ஆம் திகதி பதவிப் பிரமாணம்

(கொழும்பு)

ஐந்து புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர்.

இம்மாதம் 20ஆம் திகதி பாராளுமன்றம் கூடும் போது சபாநாயகர் டபிள்யு ஜே.எம். லொக்குபண்டார முன்னிலையில் இவர்கள் பதவிப்பிரமாணம் செய்யவுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த கேகாலை மாவட்டம் எச்.ஆர்.மைத்திரிபால, களுத்துறை மாவட்டத்தைச்சேர்ந்த நிர்மலா கொத்தலாவல, முன்னணியின் தேசியப் பட்டியலில் இருந்து முகமட்முஸா மில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியலில் இருந்து பஸீர் ஷேகு தாபூத் மாயோன் முஸ்தபா ஆகிய ஐவருமே இவர்களாவர்.

# பாராளுமன்ற குழப்பங்கள், வன்முறைகளையடுத்து கூட்டத்தொடரை பொதுமக்கள் பார்க்கத்தடை

## பாராளுமன்றச் செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றில் நடைபெறும் கூட்டங்களையும் ஏனைய நடவடிக்கைகளையும் பார்வையிடச் செல்லும் பொது மக்களுக்கான பிரத்தியேக இடம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

சபாநாயகர் லொக்கு பண்டாரவுக்கும் பாராளுமன்ற சிரேஷ்ட அதிகாரிகளுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுக்களின் போது இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்றச் செயலாளர் பிரியாணி விஜேசேகர தெரிவித்துள்ளார்.

எனினும் பாராளுமன்றம் கூடி தொடரும் நடவடிக்கைகளுக்கேற்ப அதாவது கூச்சல் குழப்பங்கள் இன்றி சுமுகமான முறையில் பாராளுமன்ற செயற்பாடுகள் நடைபெறும் பட்சத்தில் பொது மக்களின் பார்வைக்காக பின்னர் திறந்து வைக்கப்படும் என்றும் தெரிவித்த அவர்

20 ஆம் திகதி நடைபெறும் கூட்டத்தொடரில் பதவிப் பிரமாணம் செய்யும் அமைச்சர்களின் உறவினரை மட்டும் அனுமதிப்பது என முடிவெடுக்கப்பட்டுள்ளது என்றார்.

சிறிலங்காப் பாராளுமன்றத்தில் அமளிதுமளிகளும், ககலப்புக்களும் இதனையடுத்து பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்படும் சம்பவங்களும் அடிக்கடி ஏற்படுவது வழக்கம். அண்மையில் கூட ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினரான பௌத்த பிக்கு ஒருவர் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்களால் பாராளுமன்ற மண்டபத்தினுள் தாக்கப்பட்டு காயப்படுத்தப்பட்டிருந்தார். அத்துடன் சபாநாயகரின் செங்கோலை பிரதி அமைச்சர் ஒருவர் எடுத்து ஒழித்து வைத்திருந்தார். இவ்வாறான சம்பவங்களை பொது மக்கள் பார்த்துவிடக்கூடாது என்பதற்காகவே பொது மக்களுக்கான இடம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

## தலைவராக சிறிசேன

(கொழும்பு)

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக சுனில் எஸ்.சிறிசேன அடுத்த சில தினங்களில் பதவியேற்கவுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளராக கடமையாற்றிய சிறிசேனவை பண்பாட்டலுவல்கள், தேசிய உரிமைத்துவ அமைச்சர் விஜித ஹேரத் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நியமித்துள்ளார் எனவும்,

தனது புதிய பதவியை ஏற்றதும் பாதுகாப்பு அமைச்சில் இருந்து சிறிசேன விடுவிக்கப்படுவார் என்றும் ஆங்கில நாளிதழ் செய்தியொன்று கூறுகின்றது.

## ஆசியக் கிண்ண கிரிக்கெட்போட்டி

# பங்களாதேஷ் அணி116 ஓட்டங்களால் வெற்றி

# எமிரேட்ஸீக்குஎதிராக சதமடித்தார் ராவிட்

ஆறுநாடுகள் கலந்துகொள்ளும் ஆசியக்கிண்ண கிரிக்கட் போட்டிகள் நேற்று ஆரம்பமாகின. நேற்று இரண்டு போட்டிகள் நடைபெற்றன. குழு -ஏ யில் அங்கம் வகிக்கும் பங்களாதேஷ், ஹொங்கொங் அணிகளுக்கிடையில் கொழும்பு எஸ்.எஸ்.சி.மைதானத்தில் நடைபெற்ற போட்டியில்

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் 9 விக்கெட்டுகளை இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் யாவிட்மர் 68, அஷ்ரப்புல் 80, ஹபிபுல் பஷார் 32, ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர்.பந்துவீச்சில் இலியாஸ் கரல் 3 விக்கட்டுக்களைக் கைப்பற்றினார்.

222 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய ஹொங்கொங் அணி 45.2 ஓவரில் 105 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 116 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

குழு Bக்கான மற்றைய போட்டி தம்புள்ள ரிங்கிரி மைதானத்தில் இந்தியா ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிகளுக்கிடையில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 6 விக்கெட்டுகளை இழந்து 260 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் ராவிட் 105 ஓட்டங்களைப் பெற்றார். இதன் மூலம் தம்புள்ள மைதானத்தில் முதலாவது சதம் பெற்ற சாதனைக்குரியவரானார் ராவிட்.கங்குலி52 ஓட்டங்களையும், முகமட் ஹைப் 32 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றனர். பதிலுக்கு துடுப்பெடுத்த ஐக்கிய அரபு எமிரேட்ஸ் 10 ஓவர் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 40 ஓட்டங்களைப் பெற்று நெருக்கடி நிலையில் இருந்தது. இதில் தலா இரண்டு விக்கெட்டுகளை பதானும், 3 விக்கெட்டுக்களைப் பாலாஜியும் கைப்பற்றியிருந்தனர்.

# ஆசியக் கோப்பையை இந்திய அணி கைப்பற்றும்

**-சிறிகாந்த்**

இலங்கையில் நடை பெறும் ஆசியக் கோப்பை கிரிக்கெட் போடடியில் இந்திய அணி கோப்பையை வெல்லக் கூடிய பிரகாசமான வாய்ப்பு உள்ளது என இந்திய அணியின் முன்னாள் தலைவர் சிறிகாந்த் தெரிவித்துள்ளார். இந்திய அணி வலுவான அணியாக உள்ளது. இலங்கையில் இந்திய அணி சிறப்பாக விளையாடி வெற்றியுடன் திரும்ப வேண்டும் தற்போதுள்ள சூழ்நிலையில் இந்திய அணிக்கு கோப்பையை வெல்ல அதிகப்படியான வாய்ப்பு உள்ளது. ஆனால் ஒரு நாள் போட்டிகளில் எதுவும் நடக்கலாம். ஆனால் இதற்கு துடுப்பாட்டம் மிகவும் அவசியம். இந்திய அணி வலுவான துடுப்பாட்டத்தைக் கொண்டுள்ளது என்றார். கிரிக்கெட் மட்டுமன்றி மற்ற விளையாட்டுக்களுக்கும் முன்னுரிமை தரப்பட வேண்டும். இதுவரை ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் இநதியா வென்றதில்லை. ஆனால் இம்முறை அதனை வென்று வீர,வீராங்கனைகளுக்கு உற்சாகம் தரப்பட வேண்டும் எனவும் சிறிகாந்த் தெரிவித்தார்.

## வலைப்பந்தாட்ட அங்குரார்ப்பண கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட வலைப்பந்தாட்ட சங்க அங்குரார்ப்பண நிகழ்வு வரும் 19ஆம் திகதி மாலை மூன்று மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எனவே அனைத்து விளையாட்டுக்கழகங்களின் வீரர்கள் ஆர்வலர்களைக் கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அலுவலர் சு.கனகராசா கேட்டுள்ளார்.

# அணிகளின் தோல்விகள் பயிற்சியாளர்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும்

சிறிலங்காவில் நேற்று ஆரம்பமான ஆசியக் கிண்ணத்துக்கான 6 நாடுகள் பங்கேற்கும் ஒரு நாள் போட்டிகளின் வெற்றி தோல்விகள் அணிக்கு பயிற்சியளித்த வெளிநாட்டவரின் தலைவிதியை நிர்ணயிக்கும் ஒன்றாகவே இருக்கும்.

இந்தியா பாகிஸ்தான், சிறிலங்கா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்குப் பயிற்சி வழங்குவோர் ஆசிய நாடுகளைச்சேராதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றோடு போட்டியிடும் ஹொங்கொங்கிற்கும் ஐக்கிய அரபு எமிரேட்சுக்கும் இந்தியாவின் றொபின் சிற்கும் ,அபிட்அலியும் பயிற்சியளிக்கின்றனர்.

தற்போதைய ஆசிய சம்பியனாக இருக்கும் பாகிஸ்தானுக்கு இங்கிலாந்து பயிற்சியாளர் பொப் வூல்மரும், பங்களாதேஷ் அணிக்கு அவுஸ்திரேலியாவின் டேவ்வட்மோரும், இந்தியாவுக்கு ஜோன் ரைட்டும் சிறிலங்காவுக்கு ஜோன் டைசனும் பயிற்சி வழங்குகின்றனர்.

2000 ஆம் ஆண்டு ஜோன் ரைட் இந்திய வருகையின் பின்னர் அவ்வணி சிறப்பாகச் செயற்படுகிறது.109இல் ஒரு நாள் போட்டிகளில் 59 இல் வென்றுள்ளது 41 டெஸ்ட் போட்டியில் 16இல் வென்றுள்ளது.டைசனின் வருகைக்குப் பின்னர் சிறில ங்கா 23 ஒரு நாள் போட்டிகளில் பங்குபற்றி 13 இல் வென்றுள்ளது.1996இல் சிறிலங்கா உலக கிண்ணத்தைக் கைப்பற்றக்காரணமாகவிருந்த வட்மோர் பங்களாதேஷ் அணியை முன்னேற்றும் வழிகளைக் கையாள்கிறார்.

எனவே இப்போட்டிகளின்வெற்றி தோல்வி அவர்களையே சாரும்.

# அமெரிக்க வீராங்கனை மரியன் ஜோன்ஸ் எதென்ஸ் ஒலிம்பிக்கில் பங்கேற்பார்



எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளுக்கு இன்னமும் 27 நாட்களே உள்ளது. இந்த போட்டிகளில் பங்கேற்கும் அமெரிக்க வீரவீராங்கனைகளைத் தெரிவு செய்வதற்கான தகுதிகாண் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

கடந்த முறை சிட்னியில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் நீளம் பாய்தலில் பெண்கள் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்ற அமெரிக்க வீராங்கனையான மரியன் ஜோன்ஸ் தகுதிகாண் போட்டியில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.மரியன் ஜோன்ஸ் 7.11 மீற்றர் நீளத்தைத் தாண்டி முதலிடம் பெற்றுள்ளார். இது இவ் வருடத்தில் பதிவு செய்யப்பட்ட இரண்டாவது மிகச்சிறந்த பெறுபேறாகும். அத்தோடு கடந்த ஆறுவருட காலத்தில் அமெரிக்க வீராங் கனை ஒருவரால் வெளிப் படுத்தப்பட்ட மிகச்சிறந்த பெறுபேறாகவும் இது அமைந்தது.

நடப்பு ஒலிம்பிக் 100 மீற்றர் சம்பியனான மரியன் ஜோன்ஸ் கடந்த சனியன்று நடைபெற்ற ஒலிம்பிக் தகுதிகாண் போட்டியில் உரிய ஆற்றலை வெளிப்படுத்தாத நிலையில் 100 மீற்றர் போட்டியில் பங்கேற்கும் தகுதியை இழந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மாகாணமட்டக் கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.பாடசாலை அணிகளுக்கு அதிக இடம்

(வவுனியா)

வடக்கு-கிழக்கு மாகாண மட்டப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் யாழ்.மாவட்ட அணிகள் வெற்றி பெற்றுள்ளன கடந்த செவ்வாயன்று வவுனியா நகரசபை மைதானத்தில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் 19 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தை யாழ் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியும், இரண்டாம் இடத்தை யாழ்.இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியும்,மூன்றாம் இடத்தை திருகோணமலை சென் மேரிஸ் கல்லூரியும் பெற்றுள்ளன. 17வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தை யாழ். உடுவில் மகளிர் கல்லூரியும், இரண்டாம் இடத்தை யாழ். தெல்லிப்பளை யூனியன் கல்லூரியும், முன்றாம் இடத்தை திருகோணமலை சென் மேரிஸ் கல்லூரியும் பெற்றுள்ளன. 15வயதுக்குஉட்பட்ட பெண்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தை யாழ் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும், இரண்டாம் இடத்தை யாழ். வடமராட்சி இந்துக் கல்லூரியும் பெற்றுள்ளன. (21)

# தமிழீழ தேசிய இளையோர் கால்பந்துப் போட்டி கிளி.பொது மைதானத்தில் கோலாகல ஆரம்பம்

மேஜர் முரளி நினைவாக தமிழீழ விளையாட்டுத்துறை நடாத்தும் 23ஆவது தமிழீழ தேசிய இளையோர் கால்பந்துப் போட்டி இன்று கோலாகலமாக ஆரம்பமாகின்றது.

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள இச்சுற்றுப் போட்டியில் தமிழீழத்தின் எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த இளையோர் கால்பந்து அணிகளுடன் சுவிஸ் நாட்டு புலம்பெயர் தாயக உறவுகளின் இளையோர் அணிகளும் கலந்துகொள்கின்றன.

இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள இச்சுற்றுப் போட்டிக்காக கிளி.பொது மைதானம் அலங்கரிக்கப்பட்டு விழாக்கோலம் பூண்டுள்ளது.

ஆரம்ப நிகழ்வாக காலை 8.30 மணிக்குப் போட்டியாளர் அணி ஒழுங்கு, பொதுச்சுடர் ஏற்றல், தேசியக் கொடியேற்றல், அகவணக்கம், போட்டியாளர் சத்தியப்பிரமாணம்,நடுவர் சத்தியப்பிரமாணம் ஆகியவற்றைத் தொடர்ந்து போட்டிகள் ஆரம்பமாகும்.




## கிளி.மாவட்ட மெய்வல்லுநர் சங்கக் கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட மெய்வல்லுநர் சங்கக் கூட்டம் வரும் 23 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் மாலை 4.30 மணிக்கு நடை பெறவுள்ள ஒன்று கூடலுக்கு விளையாட்டு வீரர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கிளி. மாவட்ட விளை யாட்டு அலுவலர் சு.கனகராசா கேட்டுக் கொண்டுள்ளார்.



சோதியா படையணியின் 8ஆம் ஆண்டு நிறைவுதினத்தை முன்னிட்டு படையணிக்குள் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளின் சில பதிவுகள். மேற்படி போட்டிகள் கடந்த புதனன்று நடைபெற்றது.

## சிந்தனைக்கு



புயலாகச் சீண்டும் எதிரியின் அடக்குமுறை அழுத்தங்களை எல்லாம் மலையாகத் தாங்கி நிற்கும் எமது மக்களை நான் பாராட்டுகின்றேன்.

தமிழீழதேசியத்தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 17-07-2004



மின் அஞ்சல்

தொலைபேசி 060-2213244

தொலைநகல் 021-2283948

Daily@ eezhanatham. com

natham 23ela@yahoo. com


## யார்பேசுவது ஏற்கத்தக்கது !

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் யார் கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கது? யார் கூறுவது சரி?. ஏனெனில் இன்று அரச தரப்பில் இருந்து வெளிவரும் கருத்துக்கள் அனைத்திற்கும்- குறிப்பாக இனப்பிரச்சினை தொடர்பான கருத்துக்கள் அனைத்திற்குமே ஏதோ ஒரு வகையில் மறுப்புக்கள் வந்த வண்ணமேயுள்ளன.

இந்த வகையில் இறுதியாக வெளிவந்துள்ள மறுப்பு சனாதிபதியின் செயலாளர் மாகாணசபை தேர்தல் முடிவு குறித்து வெளியிட்ட அறிக்கை தொடர்பானதாகும். அதாவது மாகாணசபைத் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர்களை வெற்றியீட்டச் செய்வதன் மூலம் நாட்டு மக்கள் சனாதிபதி சந்திரிகாவிற்கு சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கும், இடைக்கால நிர்வாகசபையை அமைப்பதற்கு ஆதரவு வழங்கியுள்ளதாகவும் வெளியிட்ட அறிக்கைக்கே தற்போது மறுப்பு வெளிவந்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஐ.ம.சு.முன்னணி அரசாங்கத்தின் பேச்சாளர் மங்கள சமரவீர மேற்கூறப்பட்ட சனாதிபதி சந்திரிகாவின் செயலாளரின் கருத்தானது, சனாதிபதியின் கருத்தல்ல என நிராகரித்துள்ளார். அதாவது மாகாணசபைத் தேர்தல் மூலம் அரசுக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் கிடைத்த வெற்றி வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாக சபையை அமைப்பதற்குக் கிடைத்த வெற்றியல்ல எனக் கருத்துக் கூறியுள்ளார். அண்மைக்காலத்தில் சனாதிபதியின் கருத்துக்கள் தொடர்பாக வெளிவந்துள்ள இரண்டாவது மறுப்பு இதுவாகும். முதலாவது, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசுடன் பேச்சுக்களை நடத்திய தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பேச்சு வார்த்தையின் போது சனாதிபதி சந்திரிகா, மாகாணசபைத் தேர்தலின் பின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைகுறித்துப் பேசுவதற்குத் தயார் எனத் தெரிவித்திருந்தார்.

ஆனால், இது பின்னர் ஆளும் கட்சியினால் நிராகரிக்கப்பட்டிருந்தது, இதன்பிரகாரம் சனாதிபதி சந்திரிகா அவ்வாறு எதுவும் வாக்குறுதி அளிக்கவில்லை எனவும்தெரிவிக்கப்பட்டி ருந்தது. ஆனால் ஒன்று, சனாதிபதி சந்திரிகா தான், இப்படி ஒரு வாக்குறுதியை வழங்கவில்லையென வெளிப்படையாக இதுவரையில் கூறியதாக இல்லை.

இந்நிலையில் தான் மீண்டும் மற்றொரு மறுப்பு வந்துள்ளது. அதுவும் சனாதிபதியின் செயலாளர் விடுத்த அறிக்கைக்கு இம் மறுப்பு வந்துள்ளது. இம்மறுப்பையும் அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். ஆனால் சனாதிபதியின் செயலா ளரின் கருத்திற்கு சனாதிபதி மறுப்பெதுவும் கூறவில்லை. அதாவது சனாதிபதி செயலாளரின் கருத்தை ஏற்றுக்கொண்டுள்ளார் போன்றேயிருந்தது. அதாவது சனாதிபதி தெரிவித்ததாக வரும் கருத்துக்களுக்கு இன்று சனாதிபதி சந்திரிகா தரப்பில் இருந்து மறுப்பு வராமல், "சனாதிபதி அப்படிக் கூறவில்லை. இது சனாதிபதியின் கருத்தல்ல "என மூன்றாம் தரப்பொன்று கருத்து வெளியிடுவதும், அது குறித்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மௌனம் சாதிப்பதும் அரசாங் கம் குறித்த அவ நம்பிக்கையை மட்டுமல்ல சில உள் நோக்கங் களையும் எழுப்புகின்றது. குறிப்பாக சனாதிபதி சந்திரிகா இனப்பிரச்சினை விவகாரத்தில் இரட்டை வேடம் போடுகின்றாரா? அன்றி சனாதிபதி சந்திரிகா கையாலாகாததொரு நிலையில் இருக்கின்றாரா? என்பதே முக்கிய கேள்வியாகும். அதாவது சனாதிபதி சந்திரிகா தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு வழங்கிய வாக்குறுதியும், சனாதிபதியின் செயலாளர் இடைக்கால நிர்வாகம் பற்றித் தெரிவித்து வெளியிட்ட அறிவிப்புக்களும் அதன் பின்னர் இவை மறுக்கப்பட்ட போது சனாதிபதி மௌனமாக இருந்ததும் இதன் வெளிப்பாடா?

அன்றி சனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடைக்கால நிர்வாகம் போன்றவற்றில் ஓரளவு இணக்கப்பாடான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கலாம். ஆளும் கட்சிக்குள் கூட்டணிக்குள் உள்ள தீவிர சக்திகள் சனாதிபதியின் நிலைப்பாட்டிற்கு எதிரான வகையில் செயற்படுவதை சனாதிபதியால் கட்டுப்படுத்த முடியாதுள்ளது போயிருத்தல் வேண்டும்.ஆனால் சனாதிபதி தரப்பிலிருந்து வெளியாகும் தகவல்கள் மட்டுமல்ல அமைச்சர்கள் மட்டத்தில் இருந்துவரும் கருத்துக்களும் கூட இவ்வாறு மறுக்கப்பட்டே வருகின்றன. ஒரு புறத்தில் அமைச்சர் இப்படிக்கூறவில்லை என மறுக்கப்படுகின்றது. அன்றி இது அவரின் தனிப்பட்ட கருத்து இதற்கும் அரசாங்கத்திற்கும் தொடர்பில்லை எனக் கூறப்படுகின்றது. எடுத்துக்காட்டாக அண்மையில் அமைச்சர் மங்கல சமரவீர கருணா விவகாரத்தில் இராணுவத்தரப்பில் சிலர் கருணாவிற்கு உதவியிருக்கலாம் எனக் கூறியது உண்மைக்கு மாறானதெனவும் அமைச்சரின் தனிப்பட்ட விவகாரம் எனவும் மறுக்கப்பட்டது. இதேபோன்றே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருணாவுடன் தான் தொடர்பு கொண்டிருப்பதாகக் கூறிய போது அதுவும் அவரின் தனிப்பட்ட விவகாரம் என அரசதரப்பில் தட்டிக் கழிக்கப்பட்டு விட்டது.

இந்நிலையில் தான் யார் கூறுவது சரி? யார் கூறுவதை ஏற்றுக் கொள்ளலாம்? என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. வேறுவிதமாகக் கூறுவதானால் அரசாங்கத் தரப்பில் யார் கூறுவது ஏற்றுக்கொள்ளத்தக்கது? என்ற கேள்வி எழுகின்றது. ஏனெனில் ஒருவரால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை மற்றவர் மறுப்பதும்? ஒருவரின் கருத்தை தனிப்பட்ட விடயம் எனக் கூறுவதும் அதிகரித்துள்ள நிலையில், அரசாங்கம் யாருடையது யார் பேசுவது உத்தியோக பூர்வமானது? என்ற வினாஎழுவது தவிர்க்கப்படமுடியாததே.

# சபாநாயகரை பதவி விலக்க எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராகக் கண்டனம்

## எதிர்க்கட்சிகள் ஒன்றியம் தெரிவிப்பு

சபாநாயகர் லொக்குபண்டாரவை பதவியிலிருந்து விலக்கப் போவதாக விமல் வீரவன்சாவும், அமைச்சர் அனுராபண்டார நாயக்கவும் சமீபத்தில் அறிக்கை விட்டுள்ளமைக்கு கண்டனம் தெரிவித்துள்ளதுடன் அதற்கு எதிராக எதிர்கட்சிகளின் ஒன்றியம் கடும் நடவடிக்கை எடுக்கப் போவதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இது ஒரு சனநாயக விரோத செயலாகும் என அவர் தெரிவித்ததுடன் ஒவ்வொருவரின் சொந்த அரசியல் காரணங்களுக்காக அவரைப் பதவியிலிருந்து விலக்க முடியாது என ஹக்கீம் மீண்டும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சிறிலங்காவின் மூன்று பிரதான சிறுபான்மைக் கட்சிகளும் தமது ஆதரவைப் பாராளுமன்றத்தின் சபாநாயகர் ஜே.எம்.லொக்குபண்டாரவுக்கு உறுதியாகத் தெரிவித்துள்ளனர்.

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளே சபாநாயகருக்கான தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளன.

மாகாணசபைத் தேர்தல் முடிவுகளின் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஜே.எம்.லொக்குபண்டார சபாநாயகர் பதவியில் இருந்து விலகவேண்டும் என ஆளும் ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணி பகிரங்கமாக கோரி வரும் நிலையிலேயே சபாநாயகருக்கான தமது கட்சியின் ஆதரவினை மூன்று பிரதான சிறுபான்மைக் கட்சிகளும் வெளிப்படுத்தியுள்ளன.

சபாநாயகரை அவரது பதவியில் இருந்து நீக்கு வதற்காக மேற்கொள்ளப்படும் எந்தவித நடவடிக்கைகளுக்கும் தமது கட்சி ஆதரவு வழங் கமாட்டாது என இக்கட்சிகள் கூறியு ள்ளன.

மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஜே.எம். லொக்குபண்டாரவின் தொகுதியில் தோல்வியடைந்ததனால் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குக்களினால் தெரிவு செய்யப்பட்ட சபாநாயகரை பதவி விலகக் கோருவது எவ்விதத்திலும் நியாயமற்ற செயலாகும் என இக் கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

மாகாணசபைத் தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்கும், பொதுத் தேர்தலுக்கும், ஜே.எம். லொக்குபண்டாரவின் சபாநாயகர் பதவிக்கும் எவ்விதமான தொடர்புகளும் இல்லைஎனவும் இக் கட்சிகள் மேலும் கூறியுள்ளன.

சபாநாயகரின் தேர்தல் தொகுதியில் அவரது கட்சி தோல்வியடைந்த காரணத்தினால் சபாநாயகர் அவரது பதவியில் இருந்து விலகவேண்டும் என எவ்விதமான சட்டமும் இல்லை என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ரி.ஹசேன் அலி இவ்விடயம் குறித்து தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தலுடன் ஒப்பிடுகையில் ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணியும் 600,000க்கு மேலதிகமான வாக்குக்களை மாகாணசபைத் தேர்தலில் இழந்துள்ளது. இந்நிலையிலும் அரசாங்கமும் பதவி விலகவேண்டிவரும் எனவும் அலி மேலும் கூறியுள்ளார்.

ஆளும் அரசு நியாயமற்ற கோரிக்கை ஒன்றை முன்வைப்பதாக தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இவ்விடயம் குறித்து தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் இந்த முயற்சிக்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் ஆதரவு எப்போதும் இருக்காது எனவும் கூறிய அவர் பெரும்பான்மை பலத்துடன். தெரிவான சபாநாயகர் பெரும்பான்மை. பலத்துடன் மாத்திரமே பதவியிலிருந்து விலத்தப்படலாம் எனவும் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(32)

# சிறில. பிரதமர் மகிந்த ராஜபக்ஷ குழுவினருடன் இன்று இந்தியா விஜயம்

சிறிலங்காப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இன்று இந்தியாவிற்கான உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொள்கின்றார். பதவியேற்றதன் பின்னர் பிரதமர் மேற்கொள்ளும் முதலாவது உத்தியோக பூர்வ விஜயம் இதுவாகும்.

இம் மாதம் 19ஆம் திகதி முடிவடையும் இவ் விஜயத்தின் போது பிரதமமந்திரி மகிந்தராஜபக்ஷ இந்தியபிரதமர் மன்மோகன்சிங், நிதி மற்றும் ஏனையதுறை அமைச்சர்களையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

விவசாய கால்நடை களனி நீர்ப்பாசன அமைச்சர் அனுரதிசாநாயக்க ஆகியோரும் இந்தியப் பிரமருடன் பேசவுள்ளார். இதேவேளை பிரதமமந்திரி மகிந்தராஜ பக்ஷ இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தியையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

இதேவேளை நாடுகளுக்கிடையில் விவசாய உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் விவசாய அமைச்சர் அனுரதிசநாயக்க ஈடுபடுவார்.

பிரதம மந்திரியின் செயலாளர் லலித்வீரதுங்கவும் அவரது ஆலோசகர் ஆகியோரும் தூதுக்குழுவில் அங்கம்வகிக்கின்றனர்.

# ஐ.தே. கட்சியை திறம்பட நடத்த தலைமைப்பீடத்தில் மாற்றம் தேவை

## நவீன் திசநாயக்க பா.உ தெரிவிப்பு

எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியைத் திறம்பட நடத்த வேண்டுமானால் தலைமைப் பீடத்தில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நவீன் திசநாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் நலன்களை கருத்திற் கொள்ளாமல், விவசாயப் பிரச்சினைகள், பசளை விலை அதிகரிப்பு, சமுர்த்தி நிவாரணம் வெட்டுதல் போன்ற நடவடிக்கைகளில் ஐக்கிய தேசியக் கட்சி ஈடுபட்டதாலேயே இரண்டு தேர்தகளில் கட்சி தோல்வி கண்டுள்ளது. ஆகவே எதிர்காலத்தில் கட்சியை திறம்பட நடத்த வேண்டுமானால் தற்போதைய தலைமைப்பீடத்தில் மாற்றம் ஏற்படவேண்டும் என அவர் கூறியுள்ளார்.

# 20 ஆயிரம் கோடி வரியிழப்பு ஏற்படின் முழுநாடுமே செயலிழந்து போயிருக்கும்

## அரசினர் குற்றச்சாட்டிற்கு பந்துல குணவர்த்தன பதில்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கடந்த அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வரி மன்னிப்பினால் அரசாங்கத்திற்கு இருபதாயிரம் கோடி ரூபா கிடைக்காது போயுள்ளதாக பொய்யான குற்றச்சாட்டைச் சுமத்துவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துலகுணவர்த்தன கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; அரசாங்கத்திற்குக் கிடைக்கும் முழுமையான வரிவரு மானம் 20 ஆயிரம் கோடி ரூபா முதல் 23 ஆயிரம் கோடி ரூபாவே இந்நிலையில் ஏதாவது ஒரு காரணத்தினால் அரசாங்கத்திற்கு 20ஆயிரம்கோடி ரூபாய் கிடைக்காமல் போனால் அரசாங்கத்தின் சகலசெயற்பாடுகளும் நடை பெறாமல் போயிருக்கும்.

ஆகவே அரசாங்கத்திற்கு தான் மிகத் தெளிவாகச் சவால் விடுவதாகக் கூறிய பந்துல குணவர்த்தன இந்த வரி குறைப்புச் சட்டமூலத்தின் கீழ் ஒருபோதும் 20ஆயிரம் கோடிரூபா அரசாங்கத்திற்குக் கிடைக்காமல் போகவில்லை எனக் கூறிய அவர்.

அப்படி நடைபெற்றிருந்தால் அரசஊழியர்களுக்குச் சம்பளம் வழங்கல், ஓய்வூதியம் வழங்கல், சமுர்த்தி நிவாரணம் வழங்கல், என்பன போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க முடியாது போயிருக்கும்அதனால் முழுநாளுமே செயலிழந்து போயிருக்கும் என்றார் அவர்.

### விபத்துக்குறித்து சரியான விசாரணை இல்லை

# பொலிஸ் நிலையமுன் மக்கள் ஆர்ப்பாட்டம்

# மோதலில் ஒரு பொலிசார் பலி ; பலர் காயம்

(கொழும்பு)

வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்ததை அடுத்து பொதுமக்களுக்கும் பொலிசாருக்கும் இடையில் நடந்த மோதலில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டார், மேலும் எட்டுப் பேர் காயமடைந்துள்ளனர்.

காலி வீதி-கொஸ்கொடவில் வீதி விபத்தொன்றில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டதை அடுத்து இறந்த இளைஞரின் சடலம் அடங்கிய சவப்பெட்டியை கொஸ்கொடபொலிஸ் நிலையத்தின் முன்னால் வைத்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் ஆர்ப்பாட்டம் நடாத்தினர். மோட்டார் விபத்தொன்றில் ஒருவர் கொல்லப்பட்டது குறித்து நியாயமான முறையில் விசாரணை நடத்த பொலிசார் தவறிவிட்டனர் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதன்போது பொலிசாருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் நடந்த மோதலில் ஆர். சுகததாச என்ற கான்ஸ்டபிள் படுகாயம் அடைந்து பின் உயிரிழந்தார் என தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி விபத்தும் அதைத் தொடர்ந்த ஆர்ப்பாட்டமும் நேற்று முன்தினம் நடந்ததாகவும் பொலிஸ் கான்ஸ்டபிள் நேற்று உயரிழந்ததாகவும்ஆங்கிலநாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

# பொதுமக்கள் ராணுவம் மத்தேகொடப் பகுதியில் மோதல்

கொழும்பின் புறநகர் பகுதியான மத்தேகொடப்பகுதியில் இராணுவதினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் மோதல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இதன்போது பிரதேசத்தின் பல வீடுகள் இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்டுள்ளன.

அத்துடன் பொதுமக்கள் சிலரும் காயமடைந்துள்ளனர்.

ஏற்கனவே காலிப்பகுதியில் பொதுமக்களால் நேற்றுமுன்தினம் காவல்துறை உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்ட நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

### புலிகளிடம்....

ஆலோசனை தெரிவித்திருந்தது. இந்தக் கொள்கை ரீதியான உடன்பாடின்மையே இரு தரப்பினருக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்குத் தாமதத்தை தோற்றுவித்திருப்பதாக மக்கள் விடுதலை முன்னணி சுட்டிக்காட்டுகின்றது. மாறாக பேச்சுவார்த்தைகள் தாமதமடைவதற்கு கூட்டமைப்பில் உள்ள கட்சிகளுக்கு இடையில் உள்ள கருத்து முரண்பாடுகள் காரணம் அல்ல என்று ரில்வின் சில்வா விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### அரசின்...

தை நிலை பெறச் செய்ய முழு ஆதரவு அளிக்கப்படுமென்று உறுதியளித்திருக்கிறார்கள் என்று கூறியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் சமாதானத்திற்கான சகல முட்டுக்கட்டையையும் நீக்குவதற்கு தாம் ஏற்கனவே நடவடிக்கைகளை ஆரம்பித்திருப்பதாகவும் கூறியுள்ளார்.

இந்த நோக்கத்தை நிறைவேற்ற கிழக்கில் படையினர் அளித்துவரும் ஆதரவு குறித்து அவர் திருப்தி தெரிவித்தார்.

எவரேனும் கருணா பிரிவினரின் செயற்பாடுகள் சமாதான நடைமுறைகளுக்கு இடைஞ்சலாக இருப்பதாக தெரிவிக்வில்லையென்று ஜயந்த தனபால சுட்டிக் காட்டியுள்ளார்.

நாட்டில் சமாதானத்திற்கான ஆக்கபூர்வமான பங்களிப்பை அளிப்பதில் நோர்வே சமாதானப் பிரதிநிதிக்கு அரசாங்கம் இயன்ற சகல உதவிகளையும் வழங்கி வருகின்றது. நிகழ்ச்சி நிரல் பூர்த்தி செய்யப்பட்டதும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை உடனடியாக மீண்டும் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாக அவர் கூறினார்.

மட்டக்களப்பில் நிலமை மோசமடையுமாயின் அது சமாதான நடைமுறைகள்ில் தாக்கத்தை ஏற்படுத்துமென்று கூறிய ஜயந்த தனபால அவ்வாறான நிலமை ஏற்படுவதை தடுக்கப் படையினர் இயன்ற நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்களென்றும் தெரிவித்தார்.மட்டக்களப்பில் 223 அவது படைப்பிரிவில் உயர்மட்ட இராணுவ அதிகாரிகளின் கூட்டமொன்றிலும் ஜயந்த தனபால கலந்து கொண்டுள்ளார்.

### சிறில...

தமிழரசுக்கட்சியின் யாழ். மாவட்ட தலைமை அலுவலகத்தில் பிற்பகல் 2.30 இற்கு இச்சந்திப்பு இடம்பெற்றிருந்தது. தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா,கே. சிவாஜிலிங்கம், ந. ரவிராஜ் மற்றும் க.ஈழவேந்தன்,சி.சிவநேசன்,எஸ். கஜேந்திரன்,திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

அத்துடன் விடுதலைப் புலிகள் சமாதான நடவடிக்கைகளில் தொடர்ந்தும் முனைப்புக்காட்டி வருகின்ற போதிலும் இலங்கை அரசு பேச்சுக்களைத் தொடரும் விடயத்தில் தொடர்ந்தும் அக்கறையற்றிருப்பதையும் சுட்டிக்காட்டிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கும்விடயத்தில் அமெரிக்க அரசு இலங்கை அரசின் மீது ராஜதந்திர ரீதியிலான அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும்மெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை கடந்த 20 வருடகால யுத்தத்தினால் பெரும் பின்னடைவுகளுக்கு வட-கிழக்கு மக்கள் உள்ளாகியிருப்பதை குறித்துக் காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சர்வதேச உலகினால் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவிகள் முழுமையாக அவர்களைச் சென்றடையவும், சுமூகநிலை ஏற்படவும் விடுதலைப்புலிகளால் முன் வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பின் தேவை குறித்தும் விளக்கிக் கூறியிருந்தனர்.

இந்த நோக்கங்களைக் கருத்தில் கொண்டு விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை வழங்குவது தொடர்பாக பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமெனவும் பாராளுமன்ற உறுப்பினர்களால் அங்கு வலியுறுத்தப்பட்டிருந்தது.

யாழ்.குடாநாட்டில் தற்போது ஒன்றரை இலட்சத்திற்கும் மேற்பட்டோர் அகதிகளாக அவல வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

உயர் பாதுகாப்புவலயம் என்ற போர்வையில் தமிழ் மக்களது குடியிருப்புக்களை இராணுவம் ஆக்கிரமித்துள்ள அதேவேளை அங்குள்ள பனை, தென்னை மரங்களைத் தறிப்பதுடன் மணலைக் களவாகக் காசுக்கும் விற்பனை செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மண்டைதீவுப் பிரதேசத்தில் இராணுவம் நிலைகொண்டுள்ள பகுதிகளில் இருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் அடிப்படை மலசலகூட வசதிகள் இன்றியும் கடற்றொழில் செய்வோர் சுதந்திரமாகத் தொழில் செய்யமுடியாத நிலையிலும் உள்ளதாகத் தெரிவித்ததோடு அங்குள்ள இறால், நண்டுகளை இராணுவம் களவாக அபகரித்துச் செல்வதாகவும் தெரிவிககப்பட்டுள்ளது.

இதேவேளை முகமாலைச் சோதனைச் சாவடியில் சமாதானக் காலப்பகுதியிலும் இராணுவ புலனாய்வு அதிகாரிகள் மக்களைப் பல அசௌகரியங்களுக்கு உள்ளாக்குவதாகவும்,

வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்காக வெளிநாட்டிலிருந்துவரும் பணம் அரசாங்கத்தினூடாக செலவு செய்யப்படுவதை நாம் விரும்பவில்லை.

உடனடியாக தமிழ் மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் எனவும், அமெரிக்கா தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும். இது சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க உதவியாக அமையும்.

யாழ்ப்பாணம் வந்துள்ள நீங்கள் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளான விடுதலைப்புலிகளைச் சந்திக்காமல் செல்வது தமிழ் மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது எனவும் தமிழ் கூட்டமைப்பினர் கூறிய போது,

தமிழீழ விடுதலைப்புலிகளைப் பொறுத்தமட்டில் அவர்கள் அமெரிக்க அரசால் தடைசெய்யப்பட்டுள்ளனர். ஆகவே அவர்களைச் சந்திப்பது பெரும் சிக்கலான காரியமாக உள்ளது.

எனவே இப்பிரச்சினையை அமெரிக்க அரசாங்கத்திற்கு எடுத்து ரைப்பேன் என கொடிசெய்லர் தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளார். (36,33,27)

### கும்பகோணம்...

உயர் மற்றும் நடுத்தர மாணவர்களிற்கான பாடசாலையும், ஓலையால் வேயப்பட்ட மேற் தளத்தில் ஆரம்பப் பாடசாலையும்இயங்கி வருகிறது1ஆம் வகுப்பிலிருந்து 5ஆம் வகுப்பு வரையான ஆரம்பப்பாடசாலையில் இருபாலரும் கல்விகற்று வருகின்றனர். இந்நிலையில் நேற்று பகல் 11.30 மணியளவில் கூரைப்பகுதியில் தீப்பிடித்துக் கொண்டதையடுத்து கூரைப்பகுதி முழுவதும் தீப்பிடித்து மேற்தளத்திலிருந்த மாணவர்கள் மீது வீழ்ந்தே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. பலத்த காற்று வீசிய சமயம் இவ்விபத்து ஏற்பட்டதால் கூரை உடனடியாகவே எரிந்து போயுள்ளது. அருகில் அமைந்துள்ள சத்துணவுக் கூடத்திலிருந்து பறந்த நெருப்புத் துகள்களால் இவ்விபத்து ஏற்பட்டதென்று ஒரு சாரரும், மின் ஒழுக்கே இவ்விபத்திற்குக் காரணம் என இன்னொரு சாரரும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# கொடிகாமத்தில் 11வயதுச் சிறுமி மீது 3பிள்ளைகளின் தந்தை பாலியல் வல்லுறவு

(தென்மராட்சி)

கொடிகாமத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவரால் 11வயது மாணவி ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட நபரின் மனைவியின் தமக்கையின் மகளையே அவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளார். சிறுமி மருத்துவமனையில் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் தப்பித்தலைமறைவாகியுள்ளதாகவும் கொடி காமப் பொலிசார் தெரிவிக்கின்றனர். (28)

# அமைச்சர் ஜெயராஜ் பர்னாண்டோவின் இந்திய விஜயம் சனாதிபதியால் ரத்து

அமைச்சர் ஜெயராஜ் பர்னாண்டோபுள்ளேயின் இந்தியாவிற்கான விஜயத்தினை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இரத்துசெய்துள்ளதாகக்கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் பல பால் நிறுவனங்களுடன் சந்திப்புக்களை மேற்கொண்டு, சிறிலங்காவிற்கு இடைநிறுத்தப்பட்டுள்ள பால்மா வகைகளில் இறக்குமதி குறித்து கலந்துரையாடுவதற்காகவே இவ் விஜயம் ஏற்பாடு செய்யப்பட்டதாக அமைச்சர் பர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

இந்த விஜயத்தினை இரத்து செய்வதாக சனாதிபதியின் செயலகம் தனக்கு அறிவித்ததாக அமைச்சர் இவ்விடயம் குறித்து கருத்துத் தெரிவித்துள்ளார். இருந்தபோதிலும் தன்னுடன் இணைந்து விஜயம் மேற்கொள்ள விருந்த விவசாயத்துறை அமைச்சர் அனுரா திஸநாயக்காவின் இந்திய விஜயம் குறித்த தகவல்கள் எதுவும் தனக்குக் கிடைக்கப்பெறவில்லை எனவும் மேலும் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஒருவர் வருடத்திற்கு நான்கு வெளிநாட்டு விஜயங்களை மாத்திமே மேற்கொள்ளமுடியும் என சனாதிபதி கட்டுப்பாடு விதித்துள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது.

### யாழ்...

உறுப்பினர்கள் தரப்பில் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் நீண்ட நாட்களாக ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் கூட்டப்படாமையினைக் கருத்தில் கொண்டும், புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் திணைக்களங்கள் ஊடாக அவசர தேவைகளை இனங்கண்டு கொள்ளவும் ஏதுவாகவே இவ் மாவட்ட ஒருங்கிணைப்புச் குழு கூட்டம் கூட்டப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. காலை10.00 மணிக்கு ஆரம்பமாகி சுமார்3.00மணி நேரத்திற்கு மேலாக இடம்பெற்ற இக்கூட்டத்தில் யாழ். அரச அதிபர் உட்பட அனைத்து திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களது தலைவர்களும் கலந்து கொண்டனர். (27)

### இந்திய...

பொருள்,உயிர் இழப்புக்கள் என் பன தொடர்பாக ஆராயப்பட்டதுடன் எதிர்காலத்தில் இடம் பெறும் இந்திய மீனவர்களின் அத்து மீறல்களின் விளைவாக கடற்பரப்புகளில் உருவாகும் அனர்த்தங்களுக்கும், இந்திய மீனவர்களுக்கு ஏற்படும் இழப்புகளுக்கும், சிறிங்கா கடற் படையினரே பொறுப்பேற்கவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டதுடன் இந்திய மீனவர்களின் அத்து மீறல்களுக்கு எதிராக வெகுஜன போராட்டங்களை நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (33)

### இரு...

ளானார்கள். இவர்கள் மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் பேசாலைக் கிராமத்தைச் சேர்ந்தவர்களென்றும் தெரிவிக்கப் படுகின்றது. இவ் விபத்துத் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப் பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (மி)

# சாவு அறிவித்தல்

## கார்த்திகேசு முருகேசுசின்னத்துரை

### (ஓய்வுபெற்ற அதிபர்)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு முருகேசு சின்னத்துரை அவர்கள் 14/07/2004 அன்று காலமாகி விட்டார் அன்னார் வள்ளிஅம்மையின் (ஓய்வுபெற்ற தாதி) அன்புக் கணவரும், இராஜராயேஸ்வரி, புவனராயேஸ்வரி(மேல் நீதிமன்றம் வவுனியா), நகுலராயேஸ்வரி (லண்டன்) கேதீஸ்வரராஜா (M.S.K. கொமினிக்கேசன் திருகோணமலை), குருபரராஜா (P.D.B. கொழும்பு), பாலராயேஸ்வரி (ஜேர்மனி), மங்களராயேஸ்வரி (ஆசிரியை, சிறி.விக்னேஸ்வரா வித்தியாலயம்), பத்தீஸ்வரராஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும். காலஞ்சென்றவர்களான. பாலச்சந்திரன் (கிராம சேவையாளர் J79, பிராந்தியடி), உமாஸ்வரன் மற்றும் விஜயகுமாரன் (லண்டன்), ரதிகலா, துஷயந்தினி (கொமசல்வங்கி யாழ்ப்பாணம்), நித்தியராஜா (ஜேர்மனி), கருணாநந்தன் (M.B.B.S. ஊர்காவற்துறை), சாந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும். பிரசண்ணா, பிரசாத், பிரதாப், பிரதீப், தோபிகா, சயந்த், அஜந்த், பிரிஜந்த், சாயிவீணா, ஆதவன், ஆரணி ஆர்திகா, ஆருண்ணியா, ஆரூயா, மகுழ்றுதன், சாணவி, ஜானுகா, யனார்த்தனன், ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18/07/2004. ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10.30 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக வில்லூண்டி மாயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

இலக்கம் 31,
காட்டுக்கந்தோர், ஒழுங்கை,
சுண்டிக்குழி,
யாழ்ப்பாணம். (சி.10117)

தகவல்
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு யூலை மாதம் 17ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.